# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20
காலேப் யோசுவா
4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,
☎: 044 – 26490183 Cell : 9444701953
பூந்தமல்லி, சென்னை – 600 056.

## தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாயிருக்க வேண்டும்

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கும் தேவனுடைய சபைக்கும் எழுதுகிறதாவது:
நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற ஒரு புருஷன் மனைவியின் இல்லறவாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக இருக்க வேண்டும் என்பதை நாம் எபேசியர் 5ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம், தியானிக்கிறோம். அதன்படி கர்த்தர் சபையை போஷித்து காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும், அதாவது கிறிஸ்துவுக்குளான விசுவாசி ஒவ்வொருவனும், கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் தங்கள் மனைவியை தங்கள் சொந்த சரீரமாக பாவித்து, தன் மாம்சத்தை போஷித்து காப்பாற்ற வேண்டும். அதாவது அவன் தன் மனைவியை தன் கைகளின் பிரயாசங்களைக் கொண்டு போஷித்து காப்பாற்றுகிறவனாக இருக்க வேண்டும். தியானியுங்கள் (எபே.5:28,29). ஏனெனில் அவள், அவன் சரீரத்தின் ஒருபாகமாக இருக்கிறாள். ஆதி.2:23.24.

3. எபே. 5வது அதியில் 28,29 வசனங்களின் சாராம்சம் என்ன? கர்த்தர் சபையை போஷித்து காப்பாற்றுகிறார். அதாவது கர்த்தர் தமது சரீரமாகிய சபையை/ தம்முடைய மணவாட்டியை போஷித்து காப்பாற்றுகிறார். கிறிஸ்துவின் மணவாட்டி கிறிஸ்துவை போஷித்து காப்பாற்றுவது இல்லை. மாறாக கிறிஸ்துவே தமது மணவாட்டியை போஷித்து காப்பாற்றுகிறார்.

4. ஒரு புருஷன் தன் மனைவியை தன் சொந்த சரீரமாக பாவிக்க வேண்டும். ஏனெனில் அவள் அவன் சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள். அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள் என்றான். ஏனென்றால் தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலாஎலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்து அவளை அவனுக்கு ஏற்ற துணையாக கொடுத்தார். இப்பொழுது இவர்கள் ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள். தியானியுங்கள் ஆதி.2:18.21-24. ஆதலால்தான் பவுல் புருஷன் தன் மனைவியை தன் சொந்த சரீரமாக பாவிக்கவேண்டும் என்கிறான்.

5. இப்பொழுது கர்த்தர் தன்னுடைய சரீரமாகிய சபையை ஐந்து வகை ஊழியங்களைக் கொண்டு போஷித்து காப்பாற்றுகிறார். அந்த ஊழியங்கள் அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன் மற்றும் போதகன். இந்த ஐந்து வகை ஊழியங்களைக் கொண்டு, கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபையை போஷிக்கிறார். இந்த ஐந்து வகையான ஊழியங்களின் போதனையின்றி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பூரணப்படாது. இந்த ஐந்து வகையான உணவு அவளது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அதாவது ஆத்தும வளர்ச்சிக்குத் தேவை. பாஸ்டர் பணி மட்டும் போதாது.

6. ஆக, கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபையை போஷித்து காப்பாற்றுகிறது போன்று, ஒவ்வொரு புருஷனும் தன் மாம்சத்தை, அதாவது தன் மனைவியை போஷித்து காப்பாற்ற வேண்டும்.

7. ஆனால் ஆதியில் அவ்வாறு இல்லை. கிறிஸ்து எவ்வாறு முற்றிலும் இலவசமாக தம்முடைய சரீரமாகிய சபையை போஷித்துக் காப்பாற்றுகிறாரோ அவ்வாறாகவே ஆதியில் தேவன் ஆதாம் ஏவாளை போஷித்துக் காப்பாற்றினார். தேவன் அவர்களுக்கு இலவசமாக ஆகாரம் கொடுத்தார். ஆதாமும், ஏவாளும் வேலை செய்ய வேண்டிய தேவையில்லை. தேவன் இருவரையும் இலவசமாகவே போஷித்தார், பராமரித்தார். பூமியின் மேல் எங்கும் விதை தரும் சகலவித பூண்டுகளையும், விதை தரும் கனி மரங்களையும், சகலவித கனி தரும் விருட்சங்களையும் அவர்களுக்கு ஆகாரமாக கொடுத்தார். (ஆதி1:29). அவைகள் அனைத்தும் அது அது தன் தன் காலத்தில் கனிகளை கொடுத்து வந்தது. (வெளி.22:2). ஆதியில் தேவன் நியமித்த ஆகாரம் முற்றிலும் சைவ சாப்பாடே. நோ நான்வெஜிடேரியன்.

8. தேவன் விலக்கின கனியை ஆதாம், ஏவாள் புசித்தப்பின் பூமி ஆதாம் நிமித்தம் சபிக்கப்பட்டது. அது அவனுக்கு முள்ளும் குறுக்கும் முளைப்பித்தது. ஆதாம் வருத்தத்தோடே அதன் பலனை புசிக்கவேண்டியதாயிற்று. ஆதாம் தன் முகத்தின் வேர்வையினால் ஆகாரம் புசிக்கவேண்டியவன் ஆனான் (ஆதி.3:17-19). பாருங்கள் ஆனால் ஆதியில் அப்படி இல்லை. ஆனால் இப்பொழுது தன் ஜீவனத்துக்கு அடுத்த வேலைகளை செய்ய வேண்டியவனானான். அதிலும் சூரிய உதயம் முதல் மாலை வரை அதாவது சூரியன் மறையும் வரை தன் வேலைகளை செய்ய தேவன் அவனை நியமித்தார். இரவு நேரத்தை தேவன் மிருகங்களுக்காக நியமித்தார்.

9. பாருங்கள் சங்.104:20-24, என்ன கூறுகிறது? நீர் இருளைக் கட்டளை இடுகிறீர், இராக்காலம் ஆகும்: அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும். பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ஜித்து தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படி தேடும். சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக் கொள்ளும். அப்பொழுது மனுஷன் சாயங்காலம் மட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான். கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாய் இருக்கிறது! அவைகளை எல்லாம் ஞானமாய் படைத்தீர்.

10. ஆம் பிரியமானவர்களே தேவன் மனுஷனுக்கு நியமித்த வேலை நேரம் சூரிய உதயம் முதல் அது மறையும் வரை. அதே வேளையில் தேவன் மிருகங்களுக்கு நியமித்த வேலை நேரம் இரவு. அதாவது சூரிய அஸ்தமனம் முதல் சூரியன் உதிக்கும் வரை. மனுஷன் இரவு நேரங்களில் வேலை செய்வது தேவனால் தேவனால் நியமிக்கப்பட்டது அல்ல. அது தேவனுடைய நியமத்துக்கு மாறான ஒரு காரியம். அப்படியானால் இந்நாட்களில் இரவு நேரங்களில் வேலை செய்பவர்களைக் குறித்து நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள். எல்லாம் பணம், பணம். பணஆசையினால் தான் மனுஷன் தேவநியமத்துக்கு மீறி நடந்துக் கொண்டு நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி, மணவாட்டி என்று கூறிக்கொண்டு வீணாய் திரிகிறார்கள். அவர்கள் தங்கள் கிரியைகளில் திருப்தி அடைந்து தங்களை தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள், வஞ்சித்துக் கொள்கிறார்கள்.

11. ஆம், மனுஷன் அதிகாலையில் எழுந்து, நேரப்பட்ட வேளையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தை சாப்பிடவேண்டியவனாய் இருக்கிறான். சங்.127:3. சூரிய அஸ்தமனத்துக்குப் பின் நித்திரைச் செய்யும்படி படுத்துக் கொள்கிறான். ஆதி. 28:11. ஆம் இரவு நேரம் மனுஷனுக்கு நித்திரை நேரம். மிருகங்களுக்கு அது தங்களுக்கு ஆகாரத்தைத் தேடும் நேரம். மனுஷனுக்கு இரவு நித்திரை நேரம் 1சாமு.26:7. ஆம், இரவு தூக்கம் நேரம் 1 இரா.3:19. ஆனால் சாத்தான் தேவனுடைய நியமத்தை எவ்வாறாக மாற்றிவிட்டான் பாருங்கள்? பகல், இரவு எல்லா நேரமும் மனுஷன் தன் ஆகாரத்திற்காக பிரயாசப்படலானான். எப்பொழுதுமே தேவனுடைய நியமத்தை மாற்றுவது பிசாசு. அவன் ஆடுகள் அவனுக்கு செவிக்கொடுத்து அவனுக்குப் பின் செல்கிறது. அப்படியானால் தேவனுடைய நியமத்தின்படி பகலில் தூங்கி இரவில் வேலை செய்யும் மனுஷன் மிருகத்திற்கு ஒப்பானவனாக இருக்கிறான்.

12. ஒருவன் தன் சகோதரனைப் பார்த்து நீ இரவு நேரங்களில் வேலை செய்யாதே. அது தேவனுடைய நியமம் அல்ல என்கிறான். அவனோ நான் என்ன செய்வேன்? வயிற்றுப் பிழைப்புக்காக இரவு நேரங்களில் நான் வேலை செய்ய வேண்டியதாயிருக்கிறது என்கிறான். தன் சகோதரனை இரவு நேரங்களில் வேலை செய்யாதே என்று கூறுகிறவன் வாரத்தின் முதலாம்நாள் ஞாயிறு பகலில் வேலை செய்கிறான். அப்பொழுது இரவு வேலை செய்கிறவன் அவனைப் பார்த்து நீ சபை கூடுதலின் நாளில் வேலை செய்கிறது என்ன என்கிறான்? அவன் நான் என்ன செய்வது ஞாயிறு எனக்கு என் கம்பெனியில் வேலை இருக்கிறது என்கிறான். வேலைக்கு செல்லாவிட்டால் வேலையிலிருந்து என்னை நிறுத்திவிடுவார்கள் என்கிறான். இதனால் நான் என்ன செய்ய முடியும். என் வயிற்றுப்பிழைப்பிற்காக ஞாயிறு வேலை செய்யவேண்டியிருக்கிறது என்கிறான். இவ்வாறாக ஒருவரைஒருவர் நாம் காரணம் இல்லாமல் பட்சிக்கிறோம். தேவன் தான் ஒவ்வொருவருக்கும் சூழ்நிலைகளை மாற்றித் தர வேண்டும். அவரால் கூடாதது ஒன்றும் இல்லை.

13. புருஷன் பகல் முழுவதும் தன் பிழைப்புக்காக சம்பாதிப்பதில் சுறுசுறுப்பாக இருக்கும் வேளையில் மனைவி வீட்டில் தரித்திருக்கிறவளாக காணப்படுவாள். தன் குடும்ப காரியங்களை கவனிப்பதில் சுறுசுறுப்பாக இருப்பாள். தேவவசனம் துஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். தீத்.2:5. ஆம், ஒரு ஸ்திரீ தன் வீட்டில் தரித்திராமல் பகல் முழுவதும் ஒருவனுடைய அலுவலகத்தில் தரித்திருப்பவளானால் தேவவசனமானது அவளால் துஷிக்கப்படுகிறதாக இருக்கிறது. ஆம், ஒரு ஸ்திரீ தன் வீட்டில் தரித்திருந்து பண்புள்ள ஸ்திரீயாக இருந்து தன் கற்பை காத்துக் கொள்ள வேண்டும். தன் பிள்ளைகளை தேவனை அறிகிற அறிவில் வளர்க்க, வழிநடத்த வேண்டும்.

14. பாருங்கள், சாராள் வீட்டில் தரித்திருந்தாள் ஆதி. 18:9. வீட்டில் இருந்த ஸ்திரீயானவள் கொள்ளைப் பொருளை பங்கிட்டாள். அதோடு மட்டுமல்ல அவள் அடுப்பறையில் காணப்பட்டாள். தியானியுங்கள் சங்.68:12.13.

15. பெண்களின் சில கடமைகள் என்ன?

a. ஸ்திரீ தன் சொந்த புருஷனால் பிள்ளைகளைப் பெற்று, பின் சந்ததியை உருவாக்க வேண்டும். உபா. 25:5,6.
b. தன் பிள்ளைகளை கர்த்தருக்கு ஏற்ற போதனைகளினாலும், சிட்சைகளினாலும் வளர்க்க வேண்டும். எபே.4:6, 2 தீமோ. 1:5.
c. மனைவி தன் சொந்த புருஷனுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்படிந்திருக்க வேண்டும். எபே. 5:2,4. தீத் 2:5, 1பேது 3:1.
d. பெண்கள் சாராளைப் போன்று, ரெபெக்காளைப் போன்று தங்கள் கூடாரத்திற்குள் இருந்து கொண்டு தன் வீட்டு காரியங்ளை நிர்வகிக்க வேண்டும். (1தீமோ. 5:14 , நீதி. 31:15, 27).
e. புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். நீதி. (14:1)
f. பெண்கள் வீட்டில் தரித்திருக்கிறவளாய் இருக்க வேண்டும். (தீத்.2:5)
g. பெண்கள் பயபக்தியோடு கூடிய தங்கள் கற்புள்ள நடத்தையினால் திருவசனத்திற்கு கீழ்படியாத தன் புருஷனை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும். ( 1பேது 3:1,2)
h. ஸ்திரீ நற்கிரியைகளையும், தான தர்மங்களையும் செய்கிறவளாய் இருக்க வேண்டும். (அப் 9:26).
i. உபத்திரப்படுகிறவர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும். (1தீமோ. 5:10).
j. விதவைகளுக்கு உதவி செய்ய வேண்டும். (அப். 9 அதி.)
k. அந்நியர்களை உபசரிக்க வேண்டும். (1 தீ மோ5:10)
l. ஏழைகளுக்கு தங்கள் கரங்களை நீட்ட வேண்டும். (நீதி. 31:20)
m. தேவனுடைய ஊழியகாரர்களை உபசரிக்க வேண்டும். (அப் 16:14.15)
n. பெபேயாளைப் போன்று தேவனுடைய சபைக்கு அடுத்த பணிகளைச் செய்யலாம். (1கொரி. 16:1)
o. தேவனுடைய சபையில் பரிசுத்தவான்களுடைய கால்களை கழுவலாம் ( 1தீமோ. 5:10)
p. தன் கணவனுக்கு அல்லது ஊழியக்காரர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷப்பணியில் ஒத்தாசையாக இருக்கலாம். (அப் 18:24-28)
q. விசுவாசத்தில் கானானிய ஸ்திரீயைப்போன்று நிலைத்திருக்கலாம். (மத். 15:22)
r. மரியாளைப் போன்று ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளாக தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். (லூக். 1:42).
s. தன் புருஷன் உயிரோடு இருக்கும் அளவும் அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டு இருக்க வேண்டும். (ரோ. 7:2)
t. மரியாளைப் போன்று தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டவளாக இருத்தல் வேண்டும். (லூக் 10:42)

16. இந்நாட்களில் பெண்களுக்கு வீட்டில் தரித்திருக்க விருப்பம் இல்லை. தான் பெற்ற பிள்ளைகளை வளர்க்க, அதனுடைய சுகநலன்களைக் காத்துக் கொள்ள விருப்பம் இல்லை. அவள் பெற்ற பிள்ளைகளை கவனிக்க உற்றார் உறவினர்களை கெஞ்சிக் கூத்தாட வேண்டியதிருக்கிறது. பிறர் ஒத்தாசைகளை நாட வேண்டியதிருக்கிறது. பிள்ளைகளை பெற்றவளுக்கு அவள் முழு நேர தாயாக இருக்க முடியவில்லை. பகுதி நேர தாயாகவே இருக்கிறாள். இது ஒரு சீர்கெட்ட இல்லற வாழக்கை. இவள் தன் வாழ்க்கையில் தனிமையாக இருந்திருப்பாளாயின் அது அவளுக்கு நலமாக இருந்திருக்கும். அதிலும் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமானவளாக கர்த்தரைப் பற்றிக் கொண்டு, தேவையானது ஒன்றே ஒன்று என மரியாளைப் போன்று தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டால் அது மிக மிக நலமாய் இருக்கும்.

17. பாருங்கள் வேலைக்குச் செல்லும் பெண்கள் மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி தங்களை புறம்பாக அலங்கரிக்க வேண்டியதுள்ளது. வேலை செய்யும் இடங்களில் கவர்ச்சியாக காணப்பட வேண்டியதுள்ளது. இதனால் இளம்பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய் பால் கொடுக்க முடியவில்லை. தங்கள் மார்புகட்டை கவர்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டியதுள்ளது. வேலை செய்யும் இடங்களில் ஆபாசமான பேச்சுகளுக்கும் நகைச்சுவையான வார்த்தைகளுக்கும் இடம் கொடுத்து மகிழ வேண்டியதிருக்கிறது. நிச்சயமாக அவள் அந்த இடத்தில் ஒரு பரிசுத்தமானவாழ்க்கை, ஒரு புனிதமான வாழ்க்கை, ஒரு கற்புள்ள வாழ்க்கை வாழ முடியவில்லை. ஏனென்றால் அவளுடைய உடல்கட்டைப் பார்த்து அநேகர் இச்சிக்கின்றனர். ரசிக்கின்றனர். இவள் இதர ஆண்களின் உடல்கட்டைப் பார்த்து ஏவாளைப் போன்று வஞ்சிக்கிப்படுகிறாள். அவள் தன் கற்பை காத்துக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் எல்லா பெண்களும் இப்படித்தான் என்றுக் கூறமுடியாது. எதற்கும் விதி விலக்குகள் உண்டு.

18. பெண்கள் வேலை செய்வது குறித்து 20வது நூற்றாண்டு தீர்க்கதரிசி கீழ்க்கண்டவாறு கூறுகிறார். அவள் உன்னைப்பார்த்து புன்முறுவல் செய்து விட்டு வேறொருவன் அலுவலகம் சென்று வேலைப் பார்த்து விட்டு வீடு திரும்பி வந்து என் கணவனே என்றால் ஓ! அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. காவல் துறையில் பெண்கள் பணிபுரிகிறார்கள். அது விபசாரத்திற்கு அடையாளம். (செய்தி - அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, பத்தி 150). நீ வேலை செய்யக்கூடாது என்பதற்காக உன் நர்ஸ் வேலையை விட்டு நீங்கி விட்டாய். நல்லது. (கே.ப.166).

19. நீ உன் மனைவியை வேலைக்கு அனுப்பி அவள் கொண்டுவரும் வருமானத்தைக் கொண்டு உன் குடும்பத்தை நடத்தினால் அது தேவசித்தத்துக்கு புறம்பான இல்லற வாழ்க்கை. அந்த வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. குடும்பத்தை போஷிக்க வேண்டியது புருஷனுடைய கடமை. ( எபே. 5:29, ஆதி 3:19.)

20. அவள் ஆட்டு மயிரையும் சணலையும் தேடி தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள். தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சை தோட்டத்தை நாட்டுகிறாள். தன் வியாபாரம் பிரயோஜனம் உள்ளதென்று அறிந்திருக்கிறாள்: இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும். (நீதி 31:13,16,19). இதென்ன? அவள் தன் வீட்டிலிருந்து கைத்தொழில்கள் செய்து தன் கணவனுக்கு ஒத்தாசையாக இருந்து தன் குடும்பத்தை பராமரிக்கிறாள். ஆனால் அவள் பொது ஸ்தலங்களுக்கு வேலைக்கு செல்வதில்லை. அவள் தன் வீட்டிலே தரித்திருந்து தன் வீட்டுக் காரியங்களை கவனிக்கிறாள்.

21. பெண்கள் இந்நாட்களில் வேலைக்குச் செல்கிறார்கள். ஏன்? எல்லாம் பண ஆசை. தன் புருஷன் ஆதிக்கத்துக்குள் இல்லாமல் தன் இஷ்டம்போல் தங்கள் வருமானத்திலிருந்து செலவு செய்ய ஆசைப்படுகின்றனர். தானும் சம்பாதிப்பதினால் தன் புருஷனை தங்கள் இஷ்டம் போல் ஆட்டிப் படைக்கின்றனர். புருஷன் அவளை எதுவும் கேட்க முடியவில்லை. ஏனென்றால் இருவரும் சம்பாதிக்கின்றனர். சில குடும்பங்களில் பெண்கள் ஆண்களை விட அதிகம் சம்பாதிக்கின்றனர். இதனால் பெண்கள் ஆண்கள் ஆதிக்கத்துக்குள் இருக்க முடியவில்லை. இதனால் ஆண்களும் பெண்களோடு சேர்ந்து சமையல் செய்யும்நிலை ஏற்படுகிறது. குழந்தைகள் நலன்களை கவனிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறாக எழுதிக்கொண்டே போகலாம். ஆம் பண ஆசையே எல்லா தீமைக்கும் வேர். (1 தீமோ. 6:6-11). பணவிஷயத்தில் போதும் என்கிற மனப்பான்மை வேண்டும்.

22. மேலும் நான் கே.ப. 73 ல் பத்தி 771 யை தியானிக்கும் போது அது கீழ்க்கண்டவாறு கூறுகிறது. பெண்களில் யாருமே வேலை செய்ய கூடாது என்று நான் கூறமாட்டேன். சில சமயங்களில் சில பெண்கள் வேலை செய்ய வேண்டியதாயிருக்கிறது. ஒரு வேளை அவர்கள் வேலை செய்யமுடியாத வியாதியஸ்தனாகிய ஒரு கணவனை உடையவளாக இருக்கலாம். அந்த வேளையில் அந்த பெண் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் வியாதி உள்ள கணவனாக இருந்தாலும் அவள் வேலை செய்ய வேண்டிய நிலை இல்லாவிட்டால் அவள் வேலைக்கு செல்லாமல் இருப்பது நலம். அவளுடைய இருப்பிடம் அவளுடைய வீடு, அந்த சின்ன அரண்மனை. சரியாக அதைத்தான் அவள் செய்ய வேண்டும். மேலும் பத்தி 777யை தியானிக்கும் போது பெண்களை அடுப்பு அறையில் போடுங்கள். அதுவே அவளுக்கு உரிய இடம். அப்பொழுது எல்லாமே சரியாக இருக்கும். ஆனால் அவளை நீங்கள் பொதுஸ்தல பணிகளில் போட்டால், அவள் முடிந்தாள்.

23. ஆம் பிரியமானவர்களே. இக்காலத்திற்குரிய செய்தியானது பெண்கள் பொதுஸ்தலங்களில் சென்று பணி புரியக்கூடாது என்பதாகும். இக்காலத்திற்குரிய செய்தில் இருக்கிறோம் என்று கூறிக்கொண்டு எத்தனை பெண்கள் பொதுஸ்தலங்கள் சென்று பணி புரிகின்றார்கள்?. அவர்களை குறித்து என்ன? நீங்களே நிதானித்து கொள்ளுங்கள். மேலும் **இன்னும் ஒரு விசை கர்த்தாவே!** என்ற செய்தியில் பத்தி 114ல் தீர்க்கதரிசி கீழ்க்கண்டவாறு கூறுகிறார். மிகுந்த அசைவூட்டும் ஒரு எழுப்புதல் இந்த பெண்களை பொது ஜன வேலைகளிலிருந்தும், தெருவில் நடக்கும் காவல் பெண்மணி வேலையிலிருந்தும் எடுத்துப் போடும் என நினைக்கிறீர்களா? அவள் சமையல் அறையில் இருக்க வேண்டியவள். நீங்கள் மறுபடியும் அவளை அந்த இடத்திற்கு கொண்டுவர முடியும் என நினைக்கிறீர்களா? அவள் இரட்சிக்கப்பட்டாலோளிய அப்படி செய்ய மாட்டாள். அவள் இரட்சிக்கப்பட்டால் அதை செய்வாள். அப்பொழுது நீங்கள் அவளிடம் நீங்கள் சொல்ல வேண்டிய அவசியமே இராது. அவள் தன் இடத்தை அறிந்து கொள்வாள். பரிசுத்த ஆவியானவர் என்னை நடத்துகிறார் என்று கூறுகிறாயா? வார்த்தைக்கு முரணான ஒன்றுக்கா? அதை பரிசுத்த ஆவி என்று அழைக்காதே.

24. பாருங்கள், பெண்களுடைய இடம் சமையற் கூடம். அவள் இரட்சிக்கப்பட்ட பெண்ணாக இருந்தால் அவள் சமையற்கூடத்தை தெரிந்து கொள்வாள். அவள் இரட்சிப்படாத பெண்ணாக இருந்தால் அவளை பொதுஸ்தல பணிகளிலிருந்து சமையற்கட்டுக்கு கொண்டுவர முடியாது. அவளிடம் பரிசுத்த ஆவி இருந்தால் அவளிடம் கூறவேண்டியது இல்லை. அவள் இடமாகிய சமையற்கட்டில் நிலைத்திருப்பாள். அவர்கள் பொதுஸ்தல இடங்களில் பணிபுரிந்து பின் தங்களை பரிசுத்த ஆவி வழிநடத்துகிறது என்றால் அது ஒரு வெட்கக்கேடு. பரிசுத்த ஆவி வார்த்தைக்கு புறம்பான ஒன்றுக்கு யாரையும் வழி நடத்தாது.

25. உங்களுக்கு பரிசுத்த ஆவி என்று கூறி பின் நீங்கள் தேவனுடைய வார்த்தையை பின்பற்றாமல் போனால் , உங்களுக்குள் இருப்பது வேறொரு ஆவி. தேவனுடைய ஆவி அவருடைய வார்த்தை மேல் தங்கி உள்ளது.

26. யாத் 20:9,10 வசனங்களை தியானியுங்கள். ஏழாம் நாளோ உன் கர்த்தருடைய ஓய்வு நாள். அதிலே நீயாகிலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரி ஆனாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசலில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். பாருங்கள் நீயானாலும் என்று கூறி, பின் உன் மனைவியானாலும் என்று கூறவில்லை. ஏனெனில் மனைவி வீட்டில் எப்பொழுதும் தரித்திருக்கிறவள். அவள் வேலைக்கு செல்ல வேண்டியவள் அல்ல. ஆதலால் தான் இங்கு இதர அனைவரையும் குறிப்பிட்டு மனைவி மாத்திரம் குறிப்பிடப்படவில்லை. அவள் வீட்டில் தரித்திருக்கிறவளாய் இருக்கிறாள். அவள் இடம் வீடு, வீட்டில் அவள் இடம் அடுப்பு கூடம். தியானியுங்கள் சங் 68:12,13.

27. அன்று கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே ஆபிரகாமுக்கு பகலின் உஷ்ணவேளையில் தரிசனமானார். இதோ மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள். அவர்கள் ஆபிரகாமிடம் உன் மனைவி சாராள் எங்கே என்றார்கள். அதற்கு ஆபிரகாம் அவள் கூடாரத்தில் இருக்கிறாள் என்றான். இன்றைய நவீன ஆபிரகாம் இப்படி கூறமுடியுமா? இவன் இதோ என் மனைவி வேலைக்கு சென்றிருக்கிறாள், நான் வீட்டுக்கு காவலாளியாக இருக்கிறேன், சமையல் செய்கிறேன், பிள்ளைகளை கவனித்துக் கொள்கிறேன். அவள் பணி முடிந்து வீடு திரும்ப இரவி 9 மணி ஆகிவிடும் என்று கூறுகிறவனாக இருக்கிறான். கிறிஸ்தவ சமுதாயத்தில் பெண்கள் பொதுஸ்தலங்களுக்கு சென்று பணி புரிவது தேவவசனம் துஷிக்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது.

28. இன்னும் அநேகர் தாங்கள் கிறிஸ்துவின் பணிவிடையாளர்கள் / ஊழியர்கள் / மேய்ப்பர்கள் / சுவிசேஷகர்கள் என அழைத்துக் கொண்டு, தாங்கள் முழு நேரம் ஊழியம் செய்வதாக பெருமை பாராட்டிக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் மனைவி பொது இடங்களுக்குச் சென்று பணிபுரிந்து வருகிறார்கள். நிச்சயமாக இவர்கள் இல்லற வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. இப்படி இருக்க இவர்களின் ஊழியத்தை கர்த்தர் அங்கீகரிப்பது எப்படி? இவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தபட்டவர்கள் அல்ல. இப்படிபட்ட ஊழியக்காரர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். அவர்களைவிட்டு விலகுங்கள்.

29. முடியாக தேவவசனம் துஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். புருஷன் தன் சரீரத்தின் ஒரு பாகமாகிய தன் மனைவியை போஷித்து காப்பாற்ற வேண்டும். கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபையை போஷித்து காப்பாற்றுகிறது போன்று ஒவ்வொரு புருஷனும் தன் சரீரமாகிய தன் மனைவியை போஷித்து காப்பாற்ற வேண்டும். பெண்கள் வீட்டில் தரித்திருந்து ஒரு பண்புள்ள ஸ்திரீயாக இருந்து தன் கற்பை காத்துக் கொள்ளவேண்டும். தன் பிள்ளைகளை தேவனை அறிகிற அறிவில் வளர்த்து, சத்தியத்தின் பாதையில் வழிநடத்த வேண்டும். பெண்களை வேலைக்கு அனுப்புவது பண ஆசை. இதுவே எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது.

30. சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக! உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களோடுகூட இருப்பதாக. ஆமென்.

## இந்த சாத்தானின் ஏதேனில் நம்பிக்கையின் பலன் துரோகம்

1. எங்களது மூத்த மகன் ஜாண் பால் சரீரத்தின் பாகமாக வேலூரில் வசிக்கும் எங்களது உறவினர் இம்மானுவேல் ரத்தினராஜ் ஆசேர் அவர்களின் இரண்டு பெண் மக்களில் இளையப் பெண் கிறிஸ்லி மிடியாவை ஆவியானவரின் வழிநடத்துதலின் படி நாங்கள் தெரிந்தெடுத்தோம். தெரிந்து கொண்டதை உறுதிப்படுத்தும் வைபவமான நிச்சயதார்த்தம் 2008, மார்ச் 24 ம் தேதி நடைபெற இருப்பதாக கடந்த செய்தி தொகுப்பில் எழுதினேன். ஆனால் அன்று 11ம் வகுப்பு படிக்கும் எனது இளைய மகள் காட்ஸ்வில் ஷலோமியினுடைய ஆண்டுத் தேர்வு நடைபெற்றதால், அந்த தேதி மாற்றப்பட்டு, வைபவம் 26ம் தேதி கர்த்தருடைய தீர்மானத்தின் படி வேலூரில் நடைபெற்றது. இந்த குடும்ப வைபவத்தில் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டதா என்பது ஒரு கேள்வியாயிற்று. அந்த கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்ற பதிலை மனுஷர்களுடைய கரத்தில் ஒப்புக் கொடுக்காமல் கர்த்தருடைய கரத்தில் நான் ஒப்புக் கொடுக்கிறேன். ஏனென்றால் அவர் ஒருவரே உள்ளிந்திரியங்களையும், இருதயங்களையும் ஆராய்ந்துப் பார்க்கிறவர். அவர் மனுஷன் பார்க்கிறபடி பார்க்கிறவர் அல்ல. மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். ஆக கர்த்தருக்கு சித்தமான வேளையில் எங்கள் மகன் ஜாண் பால் சரீரத்தின் பாகத்தை நாங்கள் ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி கண்டடைந்தோம் என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

2. இந்தக் காரியம் எப்படி நடந்தேறியது என்றால்: நாங்கள் எங்கள் மகனது ஏற்ற துணையை கண்டடைய கர்த்தரை எலியேசராக முன்வைத்து, நம்முடைய சபைகளுக்கு அவனுடைய BIO-DATA வை அனுப்பிவைத்தோம். ஏற்றத் துணையை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. குடும்பத்திலுள்ள அனைவருக்கும் எந்த ஒரு பெண் மீதும் முழு மனநிறைவு உண்டாகவில்லை. முடிவாக பத்திரிக்கைகளில் பல முறை விளம்பரம் கொடுத்தோம். அதன் விளைவாக வேலூரில் உள்ள ஒரு குடும்பத்தோடு எங்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. அந்த குடும்பத்தோடு வேலூரில் உள்ள எங்கள் உறவினர் குடும்பம் குறித்து பேசினோம். எங்கள் உறவினர் குடும்பம் அவர்களுக்கு நன்றாக தெரியும் எனக் கூறினார்கள். ஆதலால் எனது உறவினர் குடும்பத்தோடு தொடர்புக் கொண்டு, அந்தப் பெண் வீட்டார் குடும்பத்தை விசாரித்தேன். இந்நிலையில் அந்த பெண் வீட்டார் தங்கள் மகன் வெளிநாட்டிலிருந்து சில மாதங்களில் வர இருப்பதாகவும், அவர் வரும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்கள்.

3. இந்த விவரத்தை அறிந்த எங்கள் உறவினர் தங்களது இளைய மகளை எனது மகனுக்கு கொடுக்க முன்வந்தார்கள். இந்த உறவினர் யார் என்றால்: எனது மூத்த சகோதரனுடைய இளைய மகனின் மனைவி குடும்பம். இந்த குடும்பத்தில் இரண்டு பெண்கள். மூத்த மகளை எனது மூத்த சகோதரனின் இளைய மகன் திருமணம் செய்துள்ளார். தற்போது இளைய மகளை எனது மூத்த மகன் திருமணம் செய்யப் போகிறார்.

4. இந்த குடும்பத்தினர் எனது மகனுக்கு பெண் கொடுக்க முன்வந்தபோது உடனே என் நினைவுக்கு வந்தது என்னவென்றால்: என் தலைமுறையிலும் எங்கள் வீட்டில் இப்படி ஒரு சம்பவம் நடந்துள்ளது. அடுத்து வாரிசு தலைமுறையிலும் மீண்டும் அப்படி ஒரு சம்பவம் நடைபெறுகிறது. எனது பெரியப்பாவின் இளைய மகன் ஒரு குடும்பத்தில் மூத்த மகளை விவாகம் செய்தார். பின் என் மூத்த சகோதரன் அந்த வீட்டில் இளைய பெண்ணை விவாகம் செய்தார். ஆக ஒரே குடும்பத்தில் அண்ணன், தம்பி பெண் கொள்வது எனது தலைமுறையிலும், இப்பொழுது எனது வாரிசு தலைமுறையிலும் நடைபெறுகிறது. ஒரு தலைமுறை சம்பவம் அடுத்த தலைமுறையிலும் நடைபெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

5. கடந்த செய்தி தொகுப்பில் **இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது** என்ற தலைப்பில் என் மகன் நிச்சயதார்த்தம் விவரம் எழுதியிருந்தேன். அதை படித்தவுடனே மும்பையில் உள்ள ஒரு சகோதரர் எனக்கு மார்ச் மாதத்தில் ஒரு நாள் போன் செய்து, செய்தி பத்திரிக்கைகளில் விளம்பரம் கொடுத்து, பெண்ணை தேர்ந்தெடுத்து, பின் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று கூறி எழுதுவது சரிதானா? உங்களுக்கு சாதகமாக எதை வேண்டுமானாலும் எழுதலாமா என்று புலம்பினார். நான் அவர் வீட்டில் பெண் எடுக்கவில்லை என்பது அவருடைய புலம்பலுக்கு காரணமாக இருந்தது. இருந்த இடத்தில் இருந்தே வரன்களை தேடமுடியாது. விளம்பரங்களை பார்த்து வரன் உள்ளவர்கள் முன் வருகிறார்கள். பல வரன்களைப் பார்க்கிறோம். பின் அதில் ஒன்றை தேர்தெடுக்கிறோம். கர்த்தரை எலியேசராக முன்வைத்து இந்த காரியத்தில் செயல்படுகிறோம். நானோ ஆவியானவருடைய வழிநடத்துதலின் படி ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்து, இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்றேன். இதில் தவறு என்ன? அவருடைய வயிற்றெரிச்சலே அவரை தவறான சிந்தனைக்கு வழி நடத்தியது. எலியேசரும் ஈசாக்குக் பெண் பார்க்க ஒரு தேசம் விட்டு மற்றொரு தேசம் சென்றான். இவன் இருந்த இடத்திலிருந்து ஜெபித்து பெண் தேர்ந்தெடுக்க வில்லை.

6. இங்கு எனக்கு என் குடும்பத்தில் நடந்த காரியம் ஒன்று ஞாபகம் வருகிறது. இப்பொழுது திருமணம் ஆகப்போகும் என் மூத்த மகனை பொறியியல் கல்லூரியில் படிக்க வைத்தேன். அவன் ஆசையை கர்த்தர் நிறைவேற்றினார். போதுமான பணவசதிகள் என்னிடம் இல்லை. ஆனாலும் கர்த்தர் மேல் பாரத்ததை வைத்து, கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசத்தோடு செயல்பட்டேன். அவ்வப்பொழுது கல்வி கட்டணம்செலுத்த மிகவும் கஷ்டப்பட்டேன். குடும்ப மற்றும் ஊழிய செலவுகளை என்னால் தாங்க மிகவும் கஷ்டமாக இருந்தது. கல்லூரி முதல்வர் டாக்டர் S.A. ராஜா அவர்கள் கண்களில் தயவுக்கிடைக்க கர்த்தர் அநுக்கிரகம் செய்தார். கடைசி ஆண்டு முடிக்கும் சமயம் கல்லூரிக்கு நான் கட்ட வேண்டிய பாக்கி ரூ.1,25,000/- அது வரை கல்லூரி முதல்வர் பொறுமையாக இருந்தது கர்த்தருடைய சுத்த கிருபையே. நான் என்னை ஒரு ஊழியக்காரன் என்று மட்டுமே அவருக்கு அறிமுகப்படுத்தியிருந்தேன். என்னால் முடிந்த வரை பீஸ் பாக்கிகளை கட்டிவிட்டு படிப்பின் இறுதி ஆண்டில் எப்படியும் மீதமுள்ள பாக்கியை கட்டித் தீர்ப்பேன் என்று அவ்வப்பொழுது வாக்கு கொடுத்து வந்தேன். ஆக முடிவு ஆண்டு நெருங்கியது. பரீட்சை நேரம் வந்துவிட்டது. பணம் கட்டாவிட்டால் பரீட்சை எழுதவிடமாட்டார்கள். அது நிச்சயம்.

7. இந்நிலையில் என் வீட்டை அடமானம் வைத்து வங்கிகளில் பணம் வாங்க வங்கிகளின் படிகளில் ஏறி இறங்கினேன், முயற்சித்தேன். ஆனால் பலன் எதுவும் இல்லை. எனக்கு வாங்கிய பணத்தை திரும்ப கட்ட தகுந்த வருமானம் இல்லை என்பதே வங்கிகளின் மறுப்புக்குக் காரணம். எனது மூத்த சகோதரர் மிக்க வசதியாக இருக்கிறார். அவரிடம் சென்று என் வீட்டை அடமானம் வைத்து தருகிறேன். பையனுக்கு பணம் கட்ட வேண்டும். படிப்பின் இறுதி ஆண்டு. உதவி செய்யுங்கள் என்று கேட்டேன். உன் வீட்டை விற்று பணம் கட்டினால் என்ன என்றார். வீட்டை விற்று விற்றால் குடும்பத்தோடு எங்கு செல்வேன் என்றேன். வாடகைவீட்டில் குடியிருக்கலாமே என்று ஆலோசனை தான் கொடுத்தார். ஆனால் உதவி செய்ய முன்வரவில்லை. இதர செலவுகளுடன் என் தேவையை ரூ.1,50,000/-. இந்த தொகையை அவர் ஒரு மணி நேரத்தில் கொடுக்க முடியும். ஆனால் உடன் பிறந்த சகோதரனுக்கு உதவ மனம் இல்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் இன்று அவர் நிலை என்ன? மாயை, மாயை, எல்லாம் மாயை என்று கூறும் பிரசங்கி கீழ்க்கண்டவாறு கூறுகிறான். ஒருவனுக்கு தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கொடுக்கிறார். ஆனாலும் அவைகளை அனுபவிக்கும் சக்தியை தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை. அவன் பிள்ளைகளைப் பெற்று அநேக வருஷம் ஜீவித்து தீர்க்காயுசை அடைந்திருந்தாலும் அவன் ஆத்மா அந்த செல்வத்தில் திருப்தி அடையாமல் போகுமானால் அவனை பார்க்கிலும் கருவிழுந்த பிண்டம் வாசி என்கிறான். தியானியுங்கள் பிர 6:1-3. லட்சம் லட்சமாக புழுதியைப் போன்று பணத்தைச் சேர்த்து அதினால் என்ன பலன்.?

8. இந்நிலையில் காலங்கள் கடந்து சென்றுக் கொண்டிருந்தது. பரீட்சையும் நெருங்கிக் கொண்டு வந்தது. நான் Hindu ஆங்கில பத்திரிக்கை படிக்கும் வழக்கம் உள்ளவன். ஆங்கில அறிவு அதிகமாக இல்லாவிட்டாலும் அறிந்த மட்டும் படிப்பேன். ஒரு நாள் காலை பத்திரிக்கை படித்து கொண்டிருக்கும்போது, அங்கு ஒரு வங்கியின் கிளை திறப்புவிழா அழைப்பு இருந்தது. அதில் ரிஜினல் மேனேஜர் பெயர் போட்டிருந்தது. அந்த பெயரை படித்தவுடன் அந்தப் பெயரோடு என் மனம் இடைபட ஆரம்பித்தது. ஏனென்றால் கர்த்தர் என்னோடு கிரியை செய்ய. இடைபட ஆரம்பித்தார். ரிஜினல் மேனேஜரை சென்று உடனே பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் என் உள்ளத்தில் பிறந்தது. அவரை சென்று பார்த்தேன். என் நிலையை எடுத்துக் கூறினேன். அவர் உடனே நீதிமொழிகளிலிருந்து ஒரு வசனத்தை எனக்குக் கூறி **நன்மை செய்யும்படி உனக்குத் திராணி இருக்கும் போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே.** நீதி 3:27. என்னால் உங்களுக்கு உதவி செய்யமுடியும். கர்த்தர் என்னை அந்த நிலையில் ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறார். உங்கள் உடன் பிறந்த சகோதரர் செய்ய முன் வராத உதவியை நான் செய்வேன் என்று கூறி எனக்கு அருகாமையில் உள்ள அவரது வங்கி கிளை மேலாளருக்கு போன் செய்து, இப்படி ஒரு நபரை அனுப்பி வைக்கிறேன், அவருக்கு ரூ.1,50,000/- தேவை. அவரது வீட்டை அடமானம் வைத்துக் கொண்டு இந்த கடனைக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

9. அதன்படி அந்த கிளை மேலாளரை சென்றுப்பார்த்தேன். அவர் உதவி செய்ய முன்வந்தார். காரியம் முடியும் தருவாயில் உங்கள் சகோதரர் (எனது மருமகளுடைய அக்காளின் மாமனார்) எங்கள் கிளையில் தான் கணக்கு வைத்திருக்கிறார்.

அவரை உங்களுடன் ஒரு இனை கையெழுத்திட சொல்லுங்கள். ஏனென்றால் உங்களுக்கு வருமானம் இல்லை. உங்கள் மகன் சம்பாதித்து தான் கடனைக் கட்டவேண்டும். நீங்கள் பணம் கட்ட முடியாத நிலையில் இருந்து விட்டால் உங்கள் வீட்டை ஏலம் போட்டு பணம் வசூலித்து விடுவோம். எங்கள் பணம் எப்படியும் எங்களுக்கு வந்து சேரும். அது ஒரு பக்கம். ஆனாலும் அந்த முடிவுக்கு இலகுவாக வரமாட்டோம். உங்கள் சகோதரனை நெருக்குவோம். அவர் உங்களை நெருக்குவார். ஏதோ ஒரு வகையில் பணம் ஏற்பாடு ஆகும் என்றார். எனது சகோதரரிடம் சென்று விவரத்தை கூறினேன். நீ நாளை உன் வீட்டை அப்படியே அழிய போட்டு விட்டால், வங்கிக்கு பணம் போய் சேருவது கஷ்டம். பின் அது என்னை பாதிக்கும். ஆதலால் நான் இனை கையெழுத்திட (Joint Signature) முடியாது என கூறிவிட்டார். ஆக பல லட்சம் பெறுமான வீட்டை வைத்துக் கொண்டு உடன் தேவையான இந்த ரூ.1,50,000/- க்கு நான் பட்டபாடு மிக மிக அதிகம். உங்கள் உடன் பிறந்த சகோதரனே சிறு உதவி ஒன்று செய்ய முன் வராத நிலையில் வங்கி எப்படி முன்வரும் என வங்கி மேலாளர் கூறிவிட்டார். வங்கி உதவி தடை பட்டது.

10 . உடனே மீண்டுமாக ரீஜினல் மேனேஜரை நாடி, விவரத்தை கூறினேன். பரவாயில்லை. உங்கள் இரண்டாவது அண்ணன் கூட உங்களுக்கு பண உதவி செய்ய முன் வரவில்லை. ஆனால் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை வழிநடத்துவார். அவர் மீது பாரத்தை வையுங்கள் என ஒரு விசுவாசி (ரீஜினல் மேனேஜர்) ஊழியக்காரனாகிய எனக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறி தேற்றினார். உடனே தன் அருகாமையில் உள்ள கிளை மேனேஜருக்கு போன் செய்து நான் இப்படி ஒரு நபரை உங்களிடம் அனுப்புகிறேன். அவருக்கு உடனே ரூ.1,50,000/- கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். அவருடைய வீட்டை அடமானமாக எடுத்துக் கொள்ளுங்கள், இதர காரியங்களுக்கு நான் பொறுப்பு என்றார். அல்லேலூயா! கர்த்தர் என் பரிகாரி கர்த்தர் என் நம்பிக்கை அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். பரீட்சை ஆரம்பமானது. உடனே கல்லூரி முதல்வருக்கு அவரே போன் செய்து இந்த நபரை பரீட்சை எழுத அனுமதியுங்கள். பீஸ் பாக்கி இன்னும் ஒரு வாரத்தில் உங்களுக்கு வந்து சேரும். அதற்கு நான் பொறுப்பு என்றார். பையன் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டான். கடன் கிடைத்தது. பீஸ் பாக்கியை கட்டி முடிக்கிறேன். சகோதரினிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவர் உண்டு. பின் வாங்கிய கடனை கட்டி முடிக்கவும் கர்த்தர் ஏற்ற வேளையில் வழியை திறந்து கொடுத்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

11. இது என்ன? என் உடன் பிறந்த சகோதரன் உதவி செய்ய முன் வராவிட்டாலும் ஒரு செய்தி தாளில் ஒரு விளம்பரத்தை கண்டு, அதன் மூலம் கர்த்தர் என்னை தகுந்த நபரிடம் அனுப்பி என் காரியங்கள் அனைத்தையும் வாய்க்க செய்தார். இந்த காரியம் கர்த்தரால் தான் வந்தது பாருங்கள். அவ்வாறாகத்தான் நாங்கள் எங்கள் மகனுக்கு பெண் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலும் கர்த்தர் வழி நடத்தினார். பத்திரிக்கை விளம்பரங்கள் மூலமாயும் கர்த்தர் நம்முடைய காரியங்களை வாய்க்க செய்கிறார் என்பதற்கு நான் அன்றும், இன்றும் சாட்சியாக இருக்கிறேன்.

12. தேவனுடைய வார்த்தை, வேதவாக்கியங்கள், இக்காலத்திற்குரிய செய்தி பத்திரிக்கை வாயிலாக பல இடங்களுக்கு சென்று வருகிறது. ஜனங்கள் படிக்கிறார்கள், தியானிக்கிறார்கள், விசுவாசிக்கிறார்கள்.ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். சத்தியத்தை அறியும் அறிவில் வளர்ந்து எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு தங்களை ஆயத்தப்படுத்துகிறார்கள். இந்த காரியங்கள் யாவும் கர்த்தராலே நடக்கிறது. ஆதலால் எங்களது காரியத்தை அசட்டையாக கூறுகிறவர்கள் குறித்து நாங்கள் எதுவும் கவலைப்படுவதில்லை. ஒரு காதில் கேட்கிறோம். அதை இருதயத்தில் ஏற்றுக் கொள்ளாது மறு காது வழியாக வெளியே விட்டு விடுகிறோம். அது எங்கள் உள்ளத்தில் தங்குவது இல்லை. இருதயத்தை தாக்குவதும் இல்லை.

13. அடுத்து பெண் வீட்டார் பெண் கொடுக்க முன்வந்த உடனே நான் அவர்களுக்கு கூறியதாவது: பாருங்கள் நான் பெந்தெகொஸ்தே அனுபவத்துக்குள் கடந்த 29 ஆண்டுகளாக இருக்கிறேன். சபை பக்திவிருத்திக்கு கர்த்தரால் ஒரு ஊழியத்தை பெற்றுள்ளேன். ஆனால் நீங்களோ ஸ்தாபன சபை பாரம்பரியத்தில் இருக்கிறீர்கள். உங்களுக்கும் எனக்கும் ஒத்துப் போகுமா? இது குறித்து முதலாவது முடிவு எடுங்கள் என்றேன். அதற்கு அவர்களோ பெண் நகைகள் அணிவதை விரும்புவதில்லை. அவளுக்குகாக நாங்கள் நிறைய நகைகள் செய்து வைத்திருந்தாலும் அதில் அவளுக்கு நாட்டம் இல்லை. ஆதலால் ஆபரணங்கள் அணிவதற்கு அடுத்த காரியங்கள் ஒரு பெரிய பிரச்சனையாக இருக்காது என்றனர். முடிவில் அவள் ஒரு செயின் கழுத்தை சுற்றி அணிந்திருப்பதாகவும் ஒரு சிறு கம்மல் இரு காதுகளிலும் போட்டிருப்பதாகவும் கூறி அதை மாத்திரம் அனுமதிக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது நான் தாலி அணியும் போது அந்த சிறு செயினை கழற்றி விட வேண்டும். கம்மல் பெண் கல்லூரி படிப்பு முடியும் மட்டும்இருக்கட்டும். பின் அதை பார்த்துக் கொள்ளலாம் என கூறினேன். அதுவும் எனது மானசாட்சிக்கு மாறாக. இளம் விசுவாசி என்ற முறையில், அனுதாபத்தில்.

14. அடுத்து ஞானஸ்நான விஷயத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினரல் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க பெண் தயார், மேலும் கர்த்தருக்கு சித்தமானால் முழு குடும்பமே வார்த்தைக்கு கீழ்படிந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க தயாராக இருப்பதாகவும் கூறினார்கள். நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இது குறித்து கடந்த செய்தி தொகுப்பிலும் எழுதி உள்ளேன்.

15. மேலும் இந்த திருமணத்திற்கு அடுத்த எந்த வைபத்திலும் பூ, பூ மாலைகள், வெற்றிலை பாக்கு போன்றவைகள் எதுவும் காணப்பட கூடாது என்றும் கேட்டுக் கொண்டேன் அதற்கும் அவர்கள் தலை ஆட்டினார்கள்.

16. அடுத்து சீதனத்தில் உங்கள் பெண்ணுக்கு ஆசீர்வாதமாக நீங்கள் எதைக் கொடுத்தாலும் அதை நாங்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வோம் பெண்ணுக்கென்றுக் கொடுப்பதை தம்பதிகள் அனுபவிப்பார்கள். மணமகன் வீட்டாருக்கு என்று கொடுப்பதை அவர் வீட்டார் அனுபவிப்பாகள் என்றேன். கொடுக்கல், வாங்கலில் எந்தவிதமான டிமண்ட் எங்களிடமிருந்து எழும்பாது என்று கூறினேன். பெண் வீட்டார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். திருமணத்தில் பெண் வீட்டார் அவளுக்கு சீதனமாக கொடுத்து அனுப்புவதை நாம் வேதவாக்கியங்களில் காண்கிறோம். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், தன் குமாரத்தியாகிய சாலொமோன் ராஜாவின் மனைவிக்கு சீதனமாக கோசேர் பட்டணத்தை கொடுத்தான்.
1 இரா.19:16. காலேப்பின் மகள் அக்சால் தன் திருமணத்திற்குப் பின் தன் தகப்பனிடம் தன் புருஷன் வீட்டிற்கு செல்லும் போது தனக்கு நீரப்பாச்சலான இடத்தை கேட்டுப் பெற்றுக் கொள்கிறாள். நியாயாதி. 1:15. ஆண், பெண்ணுக்கு வெகுமதிகள் கொடுப்பதும் வேதவாக்கியங்களில் உண்டு. ஆதி 24:17.

17. பெண்வீட்டாரோ, ஆண்வீட்டாரோ நிபந்தனைகளின் பெயரில் வெகுமதிகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டால் அந்த நிபந்தனையை ஒருவருக்கொருவர் காத்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். நிபந்தனை அற்ற வெகுமதிகளை அவர்கள் தங்கள் தங்கள் சுயவிருப்பத்தின் படி பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக வெகுமதி, சீதனத்தில் நிபந்ததனைகள் எதுவும் இருக்கக் கூடாது.

18.என் சமுதாயத்தின்படி, ஆண் வீட்டார் பெண்ணுக்கு நிச்சயதார்த்த சேலை, மூகூர்த்த சேலை (கொழுந்தியாள் பட்டு), திருமண சேலை எடுத்துக் கொடுக்க வேண்டும், தாலி செய்யும் பொறுப்பும் மாப்பிள்ளை வீட்டாருடையது. இதில் பொதுவாக பெண்வீட்டார் ஏதும் நிபந்தனைகளை கொண்டுவரமாட்டார்கள். மாப்பிள்ளை வீட்டார் அவர்கள் விருப்பப்படி எடுத்துக் கொடுப்பார்கள். பெண்ணுக்கு அதிக சீர்வரிசை செய்யும்பொது சில வேளைகளில் சேலை இவ்வளவு விலையில் இருக்கவேண்டும், தாலி இத்தனை பவுனில் இருக்க வேண்டும் என நிபந்தனைகளை பெண் வீட்டார் கொண்டு வருவார்கள். எங்கள் விஷயத்தில் நாங்களோ, பெண்ணுக்கு சேலைகள் இந்த மதிப்பிலும், தாலி இத்தனை பவுனிலும் இருக்கும் என முன்கூட்டியே சொல்லிவிட்டோம். பெண் வீட்டாரும் சம்மதம் தெரிவித்தனர். அதில் இரு வீட்டாரும் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனாலும் இதில் என் உறவினர் தலையிட்டு சேலை இவ்வளவுக்கு எடுக்க வேண்டுமோ? தாலி இவ்வளவு பவுனில் போட வேண்டுமோ என கூறி தங்களுக்கு தேவையற்ற காரியத்தில் தலையிட்டதை அறிய வந்தேன். என் தகுதி குறித்து கேள்வியும் எழுப்பினார்கள். ஒருவர் தகுதிகளை மற்றொருவர் நிதானிப்பது சரியல்ல. அவரவர் தகுதிகளை அவரவர் அறிவர். இதில் தலையீடு கூடாது. அவ்வாறு தலையிடுவது பல கேள்விகளையும், வாக்குவாதங்களையும், பிரச்சனைகளையும் உருவாகும். அதை என் உறவினர் உருவாக்கவும் செய்தார்கள். மணமகன் தன் பத்து நாட்கள் சம்பளத்தில் பெண்ணுக்கு நிச்சயதார்த்த சேலை எடுத்துக் கொடுத்தது அவருக்கு அது ஒரு ஆடம்பரமா? பிரியமானவர்களே நீ உன் ஒரு மாத சம்பளத்தில் அல்லவா அன்று நிச்சயதார்த்த சேலை எடுத்தாய், அது அந்நாட்களில் உனக்கு ஆடம்பரம் இல்லையா? சிந்தித்துப்பார்.

19. பெந்தெகொஸ்தே அனுபவத்தில் உள்ளவர்கள் தங்கத்தை சீதனமாக பெற்றுக் கொள்ளக் கூடாது என்ற ஒரு உபதேசமும் இந்த திருமண காரியத்தில் எழுந்தது. பெண்ணுக்கு அவள் வீட்டார் சீதனமாக நிலங்களை கொடுக்கலாம். வீடுகளை கொடுக்கலாம், ரொக்கப்பணம் கொடுக்கலாம், தங்கத்தை கொடுக்கலாம். இது பெண் வீட்டார் வசதி வாய்ப்பு. இதில் ஒருவர் தலையிடுவது நல்லது அல்ல. மேலும் அது தேவையற்ற ஒன்றாகும். ஒருவர் மனநிலையை மற்றொருவர் மீது திணிப்பது தவறு. வேதவாக்கியங்களின் ஆதாரம் இருந்தால் அதை நாம் உபதேசிக்கலாம். மற்றபடி அதில் தலையிடக் கூடாது. வேத வாக்கியங்களில் பொன் ஆபரணங்களைக் கொண்டு உன்னை அலங்கரிக்காதே என்றே காண்கிறோம். தங்கத்தை ஆஸ்தியாக வைத்துக் கொள்ளாதே என்று எங்கும் கூறப்படவில்லை. மாறாக உன் இருதயம் உன் தேவனாகிய கர்த்தரை விட்டு பின்வாங்கி போகாதப்படிக்கு வெள்ளியையும், பொன்னையும் உனக்கு மிகுதியாக சேர்க்க வேண்டாம் என்றே கூறுகிறது. உபா. 17:17. தங்கம், நிலம், வீடுகளைப் போன்று மதிப்புடையது. ஆக அது ஒரு ஆஸ்தி, சொத்தைப் போன்றது. ஆதலால் தங்கத்தை வைத்துக் கொள்ளாதே என்று ஒருவர் தன் சுயவிருப்பத்தை மற்றொருவர் மீது திணிக்கக் கூடாது. அது விபரீதமான வாக்குவாதங்களை, விளைவுகளை உண்டாக்கும்.

20. வேதவாக்கியங்களின் அடிப்படையில் நாம் காணும் போது ஆஸ்தி, உடமைகள், பொன், வெள்ளி அனைத்தும் தேவனுடையது. சங் 24:1, ஆகாய் 2:8. தேவன் ஒரு மனிதனுக்கு ஆஸ்திகளை கொடுத்தப்போதிலும், அதன் உரிமை அவர் இடத்திலே இருக்கிறது. அவன் அதை தன்னுடையது என்று கூறக்கூடாது. ஆஸ்திகள் தன்னில்தானே தீயது அல்ல. ஆனால் அதை உயிரிலும் ஓம்புதல் தவறு. ஏனென்றால் அது நிலையற்றது. அதை ஒருவர் தன் சுயபாதுபாப்பு என்று கூறவும் கூடாது. ஆஸ்தியும் பணமும் ஒன்றொடொன்று நெருங்கிய தொடர்பு உடையது. பணமும் ஆஸ்தியே. எப்படி பணம் ஒரு ஆஸ்தியோ, அப்படியே பொன்னும், வெள்ளியும் ஆஸ்தியே. ஆஸ்தி என்ற பொதுவான சொல்லில் பணம் அடங்கி உள்ளது. நீ பணத்தை உன் ஆஸ்தியாக வைத்திருக்கிறாய். மற்றொருவன் பொன்னை தன் ஆஸ்தியாக வைத்திருக்கிறான். அவன் பொன்னை வைத்திருப்பது தவறு என்றால் நீ பணத்தை வைத்திருப்பதும் தவறு. வீடு வைத்திருப்பதும் தவறு, நிலங்களை வைத்திருப்பதும் தவறு. வீடு, நிலங்கள் போன்று பொன்னுக்கும் விலை மதிப்பு உண்டு. ஆதலால் பிரியமானவனே இதில் வாக்குவாதம் செய்யாதே. எனக்கு கற்றுக் கொடுக்க முயற்சிக்காதே. நீ என்னிடத்திலிருந்து கற்றுக் கொள்ளப் பார். நான் என்னுடைய வாழ்க்கையில் யாருடைய பணத்திற்கும் ஆசைப்பட்டது கிடையாது. நான் அனுபவித்த கஷ்ட நஷ்டங்களை நீ நன்கு அறிவாய். கர்த்தர் இன்று என்னை தேற்றுகிறார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். கர்த்தர் இன்று என்னை தேற்றுவதில் அநேகர் பொறாமைப்படுகிறார்கள். அதுதான் காரணம்.

21. அடுத்து பெண் போட்டோ எங்களுக்கு கிடைத்தது. அதை பார்த்தவுடன், வீட்டில் அனைவருக்கும் ஏகமனதுடன் விருப்பம். எத்தனையோ பெண்களைப் பார்த்தோம். அவர்களைக் குறித்து குடும்பத்தில் பூரண திருப்தி அனைவருக்கும் ஏற்பட வில்லை. ஏதாவது ஒரு குறையை கூறி யாராவது ஒருவர் தட்டிக் கழித்து விடுவார்கள். இவளைப் பார்த்ததும் வீட்டில் அனைவருக்கும் மனதிருப்தி, முழு ஒருமனப்பாடு, ஏனென்றால் பாரா மருத்துவத்தில் பெண் ஒரு முதுநிலைப்பட்டதாரி படிப்பு படிக்கிறாள். மேலும் இளநிலை பட்டத்தில் தங்க பதக்கம் பெற்றவர். ஆனாலும் அவர் தோற்றமோ மிக்க எளிமை. பொதுவாக மாப்பிள்ளை வீட்டாருக்கு பெண் படத்தை அனுப்பும் போது, பெண்ணை அலங்கரித்து, பட்டுடுத்தி அனுப்பி வைப்பார்கள். இவளோ ஒரு சாதாரண புடவையில் எந்தவிதமான அலங்கரிப்பும் இன்றி காணப்பட்டாள். மேலும் கூறப்போனால் அவள் எளிமையே எங்களை கவர்ந்தது. இவள் தான் எங்கள் மகனுடைய சரீரத்தின் பாகம் என முடிவு எடுத்தோம். மூன்று வருட காத்திருப்பு முற்றுப்பெற்றது என அகமகிழ்ந்தோம். நான் பெண் வீட்டிற்கு சென்று வந்தேன். பெண்ணின் பெற்றோர்களும் எங்கள் வீட்டிற்கு வந்து சென்றனர். இரு வீட்டாருக்கும் அனைத்து காரியங்களிலும் ஒருமனப்பாடு ஏற்பட்டது.

22. இவ்வாறாக மிக்க மனமகிழ்ச்சியுடன் ஒருமன உடன்பாட்டில் இரு குடும்பமும் ஆனந்த கடலில் மூழ்கி இருக்கும் வேளையில் சாத்தான் புகுந்தான். எனது மூத்த சகோதரர் பல ஆண்டுகளுக்கு முன்பு என் ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் நான் ஆவியானவருடைய வழிநடத்துதலின் படி நாற்பது நாட்கள் உணவு எதுவும் இன்றி ஒரு நேரம் மட்டும் திராட்சை ரசம் பருகி, உபவாசம் இருந்த நாட்களில் கர்த்தரின் வழி நடத்துதலைப் பார்த்து சத்தியத்தை ஏற்றுக் கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார். ஆனால் பின்பு பரமகானானை முன்நோக்கி செல்வதற்குப் பதிலாக எகிப்தின் நிழலை பின்நோக்கி கர்த்தருடனே கூட நடவாமல் பின் வாங்கி போனார். இவர் என்னிடம் தம்பி, நீ பெண் வீட்டார் எதைக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்கிறேன் என்கிறாய். கொடுக்கல் வாங்கலில் கட்டாயம் நிர்பந்தம் எதுவும் இல்லை என கூறிவிட்டாய். ஆனால் பிற்காலத்தில் உன் மனம் புண்படக்கூடாது, ஆதலால் ஏதாவது ஒரு தொகையைக் கேள். நான் பெண்

வீட்டாரிடம் மறைமுகமாக பேசி உன் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறேன். இது உனக்கும் எனக்கும் இடையில் உள்ள காரியம். நீ கேட்டதாக பெண் வீட்டாரிடம் எதுவும் பேச மாட்டேன் என கூறி பல முறை என்னை ஒரு தொகையை கூற நிர்பந்தப்படுத்தி வந்தார். நானும் பல முறை அதை நிராகரித்தே வந்தேன்.

23. ஆனாலும் பல முறை நிர்பந்தப்படுத்தியதினால் அவர் வலையில் நான் விழுந்தேன். நான் அவரிடம் எனக்கு பண ஆசை அன்று முதல் இன்று வரைகிடையாது. பணம் தேவைதான். பண பற்றாக்குறையினால் நான் பல முறை மிக்க அவதிப்பட்டதும் உண்டு. ஆனாலும் என் மகனை கேட்ட ஒரு பெண் வீட்டார் சென்னை, வில்லிவாக்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் நாகர்கோவில் பெந்தெகொஸ்தே குடும்பத்தினர். எனது மகனுக்கு ரூ, 25,00,000/- பெறுமான சொத்துக்கள் மற்றும் ரூ. 5,00,000/- ரொக்கப் பணம் கொடுக்க முன்வந்தார்கள். பல முறை என்னை நிர்பந்தப்படுத்தினார்கள். ஆனால் அந்த பெண் மீது வீட்டில் ஒரு மனம் ஏற்படவில்லை. பணத்திற்கு ஆசைப்பட்டிருந்தால் அந்த பெண்ணை மகனுக்கு கட்டி வைத்திருப்பேன். திருமணம் முடிந்து இதற்குள் ஓரிரு பிள்ளைகளை பெற்றிருப்பான். மேலும் ஒரு விசுவாச குடும்பத்தினர் பையனுக்கு ரொக்கம் ரூ.2,00,000/- கொடுப்பதாக கூறினார்கள். இதுதான் கடந்த மூன்று ஆண்டுகளில் எனக்கு மிக்க குறைவாக வந்த ரொக்க சீதனம். ஆதலால் நீங்கள் விரும்பினால் இந்த தொகையை வாங்கிக் கொடுங்கள் என கூறினேன். ஆனாலும் இது கட்டாயம் அல்ல. இதில் எந்த வித நிர்பந்தமும் இல்லை. உங்களுக்கும் எனக்கும் இடையில் உள்ள காரியம் என மிக திட்டவட்டமாக கூறினேன்.

24. ஆனால் நடந்தது என்ன? என்னுடைய சகோதரர் எனக்கு கொடுத்த வாக்கை காற்றிலே பறக்க விட்டுவிட்டு பெண் வீட்டாரிடம் என் தம்பி ரூ.2,00,000/- ரொக்க பணம் டிமண்ட் பண்ணுகிறான் என கூறி பிரச்சனையை உருவாக்கிவிட்டார். அவர் இருதயத்தின் அந்தரங்களை கர்த்தர் அறிவார். இதுபெண் வீட்டாருக்கு மிக்க அதிர்ச்சி ஆயிற்று. தன்னை ஒரு ஊழியக்காரன் என்கிறார். எதுவும் டிமண்ட் செய்ய மாட்டேன் என்று பல முறை கூறினார். ஆனால் இப்போது டிமண்ட் பண்ணுகிறார். அப்படியானால் பிற்காலங்களில் இவரை எப்படி நம்பமுடியும் என அங்கலாயித்ததை அறியவந்தேன். ஆனாலும் இது என் பையனுடைய தகுதிக்கு ஒரு பெரிய தொகை அல்ல. மிக மிக அற்பமானதே. நான் மாம்சத்திற்கேற்றபடி மேன்மை பாராட்டி புத்தியீனனைப்போலச் சொல்கிறேன்.

25. கர்த்தருக்கு சித்தமான வேலையில் இந்த காரியம் குறித்து நான் அறிய வந்ததால் ஏற்ற வேளையில் பெண் வீட்டாரோடு தொடர்பு கொண்டு, நடந்த விவரத்தை எடுத்துக் கூற அவர்கள் தங்கள் மனதை பழைய நிலைக்கு மாற்றிக் கொண்டார்கள். இவ்வாறாக இந்த திருமணத்திற்கு ஏற்பட்ட, சாத்தான் கொண்டுவந்த முதல் முட்டுக்கட்டை உடைக்கப்பட்டது.

26. இந்நிலையில் நிச்சயதார்த்தம் தேதி மார்ச் 24ம் தேதி குறிக்கப்பட்டது. ஆனால் பின் அது 26ம் தேதிக்கு மாற்றப்பட்டது.

27. மார்ச் மாத தொடக்கத்தில் பெண்ணின் தந்தைக்கு ஒரு மேஜர் ஆப்ரேஷன் வேலூர் CMC மருத்துவமனையில் நடைபெற்றது. அவர்களை நான் பார்க்க சென்றிருந்தேன். அப்பொழுது அங்கு எனக்கு மீண்டும் ஒரு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது. அதாவது பெண் கிறிஸ்லியை தவிர குடும்பத்தில் அனைவரும் ஞானஸ்நானம் ஒரு பாஸ்டரிடம் பெற்றுக் கொண்டதாக கூறினார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றீர்களா என்று நான் கேட்டதற்கு ஆம் என்று கூறினார்கள். ஆனால் நான் அதை நம்பவில்லை.

28. கர்த்தர் காரியங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர ஆரம்பித்தார். ஏனென்றால் அவர் தன்னுடைய ஊழியக்காரனுக்கு இப்படிப்பட்ட காரியங்களை குறித்து மறைப்பது இல்லை. நான் மருத்துவமனையில் இருக்கும்போதே அங்கு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பாஸ்டர் வந்து விட்டார். அவருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்து நீங்கள் எங்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்ததை இவர் நம்ப மறுக்கிறார் என பெண்ணின் தாயார் கூறினார்கள். பாஸ்டர் மௌனம் சாதித்தார். நான் காரியத்தை நிதானிக்க ஆரம்பித்தேன். பாஸ்டரும் நானும் ஒரே நேரத்தில் மருத்துவமனையை விட்டு வெளியேறினோம். பாஸ்டர் தன் வாகனத்தில் என்னை அழைத்துச் சென்று வேலூர் பஸ் நிலையத்தில் விட்டு சென்றார். அப்பொழுது அவரிடத்திலிருந்து அவரின் விசிட்டிங் கார்டை கேட்டு பெற்றுக் கொண்டேன்.

29. நான் வீடு வந்த உடனே பாஸ்டருக்கு போன் செய்து ஞானஸ்நானம் விவரம் கேட்டேன். அவர் உண்மையை கூறினார். அவர் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் மத். 28:19ன்படி கொடுத்ததாக கூறினார். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அப். 2:38ன் படி அவர்கள் எடுத்ததாக கூறுவது தவறு எனவும் கூறினார். மேலும் நான் சென்ற பிறகு பெண்ணின் அம்மாவுக்கு போன் செய்து அவர்கள் தனக்கு முன்பாகவே என்னிடம் பொய் சொல்லியதற்கு அவர்களை கண்டித்ததாகவும் கூறினார். ஆக பெண்ணை தவிர இதர குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் சாத்தானுடைய வலையில் விழுந்தார்கள். பெண் கோழிக் குஞ்சுகளுக்கு மத்தியில் உள்ள கழுகு குஞ்சாக காணப்பட்டாள். ஆதலால் தான் அவள் மட்டும் வஞ்சிப்பப்பட வில்லை. கர்த்தர் அவளை காத்துக் கொண்டார். அதற்காக அந்த வேளையில் கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.

30. பெண் வீட்டார் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து பெற்றார்களா, அல்லது அறியாமல் ஞானஸ்நானம் பெற்றார்களா என்பதை கர்த்தர் அறிவார். ஆனாலும் அவர்கள் தொடக்கத்தில் என்னிடம் கூறியபடி நடந்து கொள்ள வில்லை. ஏன் இந்த திடீர் மனமாற்றம்? எல்லாம் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாய் இருக்கிறது. பெண்வீட்டார் பிசாசின் வழியில் திருத்துவ முறையில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதற்கு பெண்ணின் மூத்த சகோதரி திருமதி. எமிலி பாலசிங் அவர்கள் காரணம் என்பதை என்னால் உணரமுடிந்தது. திருமதி. எமிலிக்கு அறிமுகமான CMCயில் பணிபுரியும் ஒரு சகோதரியின் கணவர்தான் இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பாஸ்டர். இவர் வேலூரில் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிசெய்துக்கொண்டு, இரு எஜமான்களுக்கு வேலை செய்து வருகிறார். அதாவது தேவனுக்கும் பணி செய்கிறார். பிசாசுக்கும் பணி செய்கிறார். அப்படியானால் இவர் கர்த்தரால் அவரது சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியத்தில் ஒருவர் அல்ல என்பதை சத்தியத்தை அறிந்தவர்கள் அறிவார்கள். பெண் வீட்டார் அறியவில்லை.

31. நான் CMC மருத்துவமனையில் இருந்தபோது திருமதி. எமிலி என் ஊழியத்தை குறைகூறி, என்னை அவர்களுடைய தந்தைபோல் நினைத்து எனக்கு ஆலோசனை, மற்றும் புத்திமதி கூறுவதாக சில காரியங்களை எடுத்துக் கூறினார்கள். நான்

மருத்துவனைக்கு ஒரு நோயாளியைப் பார்க்க சென்றிருந்தேன். அங்கு ஆவிக்குரிய காரியங்களை குறித்தோ, குடும்ப காரியங்களை குறித்தோ, வாக்குவாதத்திற்கோ, அல்லது ஒருவர் அறிவுரையைக் கேட்கவோ செல்லவில்லை. ஆதலால் அதிக நேரம் மௌனம் சாதித்தேன். பின் சென்னை வந்தவுடன் என் இதர பணிகளை ஒதுக்கிவிட்டு நான் தூத்துக்குடி செல்வதாக இருந்த பயணத்தையும் நிறுத்தி வைத்துவிட்டு, திருமதி. எமிலிக்காக எனது தேவத்துவம், நாம் ஏன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும்? மேலும் ஊழியங்களுக்கு அடுத்த செய்தி தொகுப்புகள், இராப்போஜனம், மற்றும் கால்கள்ள கழுவுதல் ஆசரிப்பு போன்ற செய்தி தொகுப்புகளை அனுப்பிவைத்து, அதை படித்துவிட்டு, பின் என் குறைகளை சுட்டிக்காட்டும்படி ஒரு கடிதம் எழுதி அனுப்பினேன். அதோடு மட்டுமல்ல எனக்கு அவர்கள் புத்திமதி சொல்ல வயதும் பத்தாது ஆவிக்குரிய அனுபவமும் கிடையாது என கடிந்து கொண்டேன். இதுவரை அவர்களிடமிருந்து எனக்கு பதில் எதுவும் இல்லை. நிச்சயமாக அவர்கள் பதில் கொடுக்க மாட்டார்கள். ஏனென்றால் என்னுடைய காரியங்களை மறுத்து அதற்கு வேதவாக்கியங்களை ஆதாரமாக கொடுக்க அவர்களால் ஒருகாலும் முடியாது. ஆக இந்த திருமணக்காரியத்தில் அவ்வப்பொழுது எழும்பும் பிரச்சனைகளுக்கும் திருமதி. எமிலி பாலசிங் ஒரு காரணமாக இருந்து வருகிறார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டுகிறேன்.

32. அடுத்தக் கட்டமாக தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியும், ஆவியானவருடைய வழிநடத்துதலின்படியேயும், மார்ச் 23ம் தேதி மதியம் வேலூர் சென்று, பின் அங்கிருந்து காட்பாடிக்குச் சென்று, அங்குள்ள நமது சபை ஒன்றில் பெண் கிறிஸ்லிக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தேன். ஞானஸ்நானத்திற்கு முன் கிறிஸ்துவின் சுவிஷேத்தைக் குறித்தும், நாம் ஏன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதைக் குறித்தும் விளக்கமாக ஒரு செய்தி கொடுத்தேன். பின் நாங்கள் கர்த்தருடைய இராப்போஜன பந்தியை ஆசரித்தோம் அதன் பின் கால்களை கழுவும் பந்தியையும் ஆசரித்தோம். கர்த்தருடைய கிருபையினால் அனைத்து சடங்காசாரங்களும் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாக, சாட்சியாக நடைபெற கர்த்தர் துணை நின்றார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். காட்பாடி சபையில் பலர் இந்த ஆராதனையில் கலந்து கொண்டு எங்களை உற்சாகப்படுத்தினார்கள். அவர்களுக்கு என் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கௌ்ளுகிறேன்.

33. 23ம் தேதி அன்று என் மருமகள் சமைத்த சிக்கன் குழம்பு சாப்பாடு மிகவும் ருசியுள்ள / சுவையான மதிய உணவாக இருந்தது. மருமகள் படிப்பில் மட்டுமல்ல சமையலிலும் கில்லாடிதான். ஆக மதியம் ஒரு நல்ல சுவையான சாப்பாடுடன் பின் மாலை ஒரு மனம் திரும்புகிற பாவியின் நிமித்தம் பரலோகத்தில் உண்டான சந்தோஷத்துடன் சென்னை திரும்பினேன்.

34. முடிவாக மார்ச் 26ம் தேதியும் வந்தது. அது நிச்சயதார்த்தம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நாள். நாங்கள் வைபவத்தை காலை 11.30 மணியளவில் தொடங்கி மதியம் 1.30 மணியளவில் முடிப்பதாக இருந்தது. அதன் பின் மதிய உணவு. திருமண நாள் குறித்து முடிவு செய்தல் மற்றும் இதர திருமண காரியங்களை குறித்து ஆலோசித்தல். மதியம் 3 மணியளவில் சென்னை திரும்புதல். இது தான் அன்றைய புரோகிரமாக இருந்தது. ஆனால் நாங்கள் வேலூர் சென்றடைய மதியம் 12 மணி ஆகிவிட்டது. நாங்கள் ஏற்றவேளையில் ஆயத்தமாகத்தான் இருந்தோம். ஆனாலும் எங்களுடன் வரவேண்டிய ஒரு சகோதரர் காலதாமதம் ஆனதால் சற்ற காலதாமதமாகவே நாங்கள் போய் சேர்ந்தோம். இதனால் வைபவத்தை ஆரம்பிக்க 12.30 மணி ஆகிவிட்டது. நாங்கள் பெண்ணுக்காக கொண்டுச் சென்ற சீதனப் பொருட்களைக் கொடுக்க, நிச்சயதார்த்தத்துக்காக எடுத்துச் சென்ற ஆடைகளை பெண் அணிந்து வர மீண்டும் காலதாமதம் ஆனது. இதனால் பெண் வைபவத்திற்கு ஏற்ற வேலையில் வந்து குடும்பத்தினரோடு உட்கார முடியவில்லை. ஆதலால் பெண் ஆடை அணிந்து கொண்டிருக்க நாங்கள் வைபவத்தை ஆரம்பித்து விட்டோம்.

35. காட்பாடி பாஸ்டர் ஜெபிக்க ஆராதனை ஆரம்பமானது. இரு பாடல்கள் பாடினோம். பாடல்கள் முடிய பெண் வைபவத்தில் வந்து அவர்களுக்காக போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன் எனக்கு மீண்டும் அது ஒரு அதிர்ச்சியின் நாளாக எனக்கு இருந்தது. பெண் என் எதிர்பார்ப்புக்கு மாறாக காட்சியளித்தார்கள். இதற்காகவா சுமார் 3 ஆண்டுகள் நான் காத்திருந்தேன். எத்தனையோ முறை இது குறித்து பெண் வீட்டாரிடம் பேசி இருக்கிறேனே. அப்படி இருந்தும் இந்தக் காட்சி ஏன்? நான் செய்ய வேண்டியது இன்னது என்று அந்த நேரத்தில் எனக்கு தெரியவில்லை. என் இருதயம் கரைந்துப் போனது. பெண் அந்த அளவுக்கு ஆடம்பரமாக தன்னை அலங்கரித்து வரவில்லை. அதை யாராலும் மறுக்க முடியாது. ஆனாலும் தேவையற்ற, நான் வேண்டாம் என்றுக் கேட்டுக் கொண்ட அணிகலன்களை அங்குக் கண்டேன். பெண் ஒரு ஜான் நீளத்தில் பூச்சரம் தன் கொண்டையில் அணிந்திருந்தார்கள். வலது கையில் 3/4 வளையல்கள் போட்டிருந்தார்கள். இதைத்தான் நான் எதிர்பார்க்கவில்லை, விரும்பவில்லை. மற்றபடி அவர்களிடம் நான் குறை எதுவும் காணவில்லை. நான் வேண்டாம் என்று கூறியவைகள் அங்கு காணப்பட்டதால் நான் மிக்க நிர்பந்தமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டேன். மனம் போராடிக்கொண்டிருந்தது. என் வாசனையை பெண் வீட்டார் கெடுத்து விட்டார்கள். என்னை கலங்கப் பண்ணினார்கள். இது பெண்ணினுடைய தவறா? அவளுடைய பெற்றோருடைய தவறா? அல்லது உறவினர்களுடைய தவறா? ஆனால் பெண் நிர்பந்தத்துக்குள் தள்ளப்பட்டாள் என்பதை நான் நன்கு அறிவேன். பெண்ணுக்கு தேவன் கொடுத்த அழகே போதும் என நாங்கள் மன ரம்மியமாக இருக்கும்போது பெண் ஏன் தன்னை தேவையற்ற பொருள்களால் அழகுபடுத்தவேண்டும்?

36. நான் ஒரு அவிசுவாசியை என் மகனுக்கு பெண்ணாக கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால் ஒரு விசுவாசிக்கு அவிசுவாசியை திருமணம் செய்து வைக்கும்போது அந்த விசுவாசி தன் சரீரத்தின் பாகமாகிய தன் மனைவியைக் கண்டைவதில்லை. அவன் மற்றொரு சரீரத்தின் பாகத்தைக் கொண்டு வந்து தன் சரீரத்துடன் ஒட்டவைத்துக் கொள்கிறான், இணைத்துக் கொள்கிறான். ஆனால் அந்தப் பெண் (அவிசுவாசி) அந்த புருஷன் (விசுவாசி) சரீரத்தின் பாகமாக இருப்பதில்லை. இதனால் அவர்கள் வாழ்க்கை முழுவதும் போராட்டம், பிரச்சனை. அவர்கள் வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காமல் போய் விடுகிறது. பெண் புருஷனுக்குக் கீழ்ப்படிவதில்லை. அவள் வீட்டில் தரித்திருப்பது இல்லை. தன் பிள்ளைகளுக்கு பகுதி நேர தாயாக இருப்பாள். குடும்ப வாழ்க்கையில் அமைதி இல்லை, நிம்மதியில்லை.

37. நான் பெண்ணை அந்த சிறு பூச்சரத்தை தலையிலிருந்து எடுக்க கூறவேண்டும், அவள் அணிந்துள்ள 3/4 வளையல்களை கழட்டச் சொல்லவேண்டும். அவள் மறுப்பாளாயின் நான் நிச்சயதார்த்தத்தை நிறுத்த வேண்டும். அந்த அளவுக்கு ஒரு விபரீதம் ஏற்படுமாயின் அங்கு அந்த வேளையில் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுமா? அல்லது துஷிக்கப்படுமா? பலவிதமான போராட்டங்கள் என் மனதில், உள்ளத்தில். இந்த இக்கட்டான வேளையில்

ஆவியானவருடைய வழிநடத்துதலுக்காக காத்திருந்தேன். முடிவாக ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, பொதுவாக பொன் ஆபரணங்களினால் ஒரு விசுவாசி தன்னை அலங்கரிப்பது தவறு என மீண்டும் கடிந்துக் கொண்டு, அதை கண்டனம் பண்ணி, புத்திச் சொல்லி மேலும் இந்த விதமான தவறுகள் திருமண வேளையில் நடக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எச்சரிப்புடன் நிச்சயதார்த்தத்தை நிறைவேற்றி முடித்து வைக்க முடிவு செய்தேன். என் தேவனாகிய கர்த்தருக்குள் என்னை திடப்படுத்திக் கொண்டேன்.

38. இந்த வேளையில், இந்த இடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய நாமம் மகிமைப்படுமா என்பது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது என கூறி என் செய்திக்குரிய பாகத்தை ஆதி. 24:10-20 வசனங்களில் எடுத்து வாசித்து, செய்தியை / பிரசங்கத்தை தொடங்கினேன். என் வாயை அடைக்காமல், என் ஆவியின் வேதனையினால் பேசினேன். என் ஆத்மாவின் கசப்பினால் அங்கலாயிக்கலானேன்.

39. திருமணத்தில் மூன்று கட்டங்கள் (Stages) உண்டு. முதலாவது ஒருவன் சரீரத்தின் ஒரு பாகமாகிய தன் மனைவியை தெரிந்துக் கொள்ளுதல். (Choosing his bride) இரண்டாவது ஒருவன் தன் சரீரத்தின் பாகமாக தெரிந்துக் கொண்ட பெண்ணை உறுதிப்படுத்துவது. அவளை நிச்சயித்துக் கொள்ளுதல் ( Betrothal) மூன்றாவதாக அவன் தன் பாகமாக நிச்சயித்துக் கொண்டப் பெண்ணை ஒரு திருமணவிருந்து மூலமாக (wedding feast or supper/ marriage feast) உலகிற்கு அறிமுகப்படுத்துதல். இது திருமணம் அல்லது விவாகம் எனப்படும்.

40. அடுத்து ஆதியில் தேவன் தம்முடைய சாயலாகவும், ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்கினார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். (ஆதி. 1:26-27). மனுஷன் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்டான் அதாவது ஒரே சரீரத்தில் ஆணும் பெண்ணுமாக மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான். தேவசாயலாகவும் ரூபத்தின் படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் ஆணும் பெண்ணுமாக இருந்ததால் தேவனும் ஆணும். பெண்ணுமாகத் தான் இருந்திருக்கவேண்டும். மனுஷனுக்குள் அவனுடைய மனவாட்டி இருந்தாள். தேவனுக்குள் அவருடைய மனவாட்டி இருந்தாள். இந்த சரீரம் ஆவிக்குரிய சரீரம் அதாவது ஆவியின் சரீரத்தில் மனுஷன் ஆணும் பெண்ணுமாக ஒரே சரீரத்தில் இருந்தான். ஆவியாகிய தேவனும் ஆணும், பெண்ணுமாக ஒரே சரீரத்தில் இருந்தார்.

41. பின் நடந்தது என்ன? தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த மனுஷன் மாம்ச சரீரத்துக்கு வந்தான். ஆனாலும் அவனுக்குள் அவன் மணவாட்டி இருந்தாள். அவளை இன்னும் வெளியே கொண்டுவரவில்லை. ஆதலால் தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரைஅடைந்தான். அவர் அவன் விலாஎலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்: இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். (ஆதி. 2: 21-23). மனுஷனுக்குள் இருந்த பெண் சுபாவம் அதாவது அவனுடைய மனைவி / மணவாட்டி வெளிப்பட்டு மனுஷி என அழைக்கப்பட்டாள்.

42. இவ்வண்ணமாகவே தேவன் ஆவியாயிருக்கிறார். அவருக்குள் அவருடைய மணவாட்டிஇருந்தாள். காலம் நிறைவேறின போது தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். தேவன் மாம்ச சரீரத்தை உடையவரானார். ஆனாலும் அவருக்குள் அவருடைய மணவாட்டி இருந்தாள். கிறிஸ்துவுக்குள் இருந்த மணவாட்டி ஒருநாள் வெளியே கொண்டுவரப்பட்டாள். எங்கு? கல்வாரியில். ஏதெனில் ஆதாம் அயர்ந்த நித்திரை அடைந்தான். இங்கு கல்வாரியில் இயேசு மரித்தார். நித்திரை ஒரு மனிதனை மரணநிலைக்கு கொண்டுவருகிறது. என்னடா பிணம் மாதிரி தூங்குகிறாய் என நாம் மிக்க அயர்ந்த நித்திரையில் இருக்கும் ஒருவரை கூறுவது உண்டு. ஏதேனில் விலாஎலும்பு வெளியே எடுக்கப்பட்டது. கல்வாரியில் போர்சேவகரில் ஒருவன் ஈட்டியாலே இயேசுவின் விலாவில் குத்தினான். இரத்தமும் தண்ணீரும் உடனே புறப்பட்டது. (யோ 19:33,34). குழந்தை பிறப்பில் இரத்தமும் தண்ணீரும் புறப்படுகிறது/ வெளிப்படுகிறது. ஆம் கிறிஸ்துவின் மணவாட்டி கல்வாரியில் கிறிஸ்துவின் விலாவிலிருந்து வெளிவந்தாள்.

43. இப்பொழுது கிறிஸ்துவுக்குள் உலக தோற்றத்துக்கு முன்பே என் மகன் ஜாண் பால் ஆணும், பெண்ணுமாக இருந்தான். அவனுக்குள் அவனுடைய மணவாட்டி கிறிஸ்லி இருந்தாள். காலம் நிறைவேறினபோது ஒரே சரீரத்தில் இருந்த இருவரும் பிரித்தெடுக்கப்பட்டு, தனித்தனியே வெவ்வெறு மாம்ச சரீரத்தில் பிறந்து வெவ்வேறு சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர். ஜாண் பால், காலேப் யோசுவா மற்றும் எப்சிபா கமலம் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தான். அவண்ணமாகவே கிறிஸ்லியும் இம்மானுவேல் இரத்தினராஜ் ஆசேர் மற்றும் அன்னத்தாய் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தாள்.

44. ஆதியில் ஆவிக்குரிய சரீரத்தில் ஆணும் பெண்ணுமாக இருந்த மனுஷன், ஏதேனில் மாம்சத்திற்குரிய சரீரத்தில் ஆணும் பெண்ணுமாக தனித்தனி சரீரத்துடன் பிரித்தெடுக்கப்பட்டனர். பாருங்கள் தேவன் ஆவியாயிருக்கிறார். (யோ 4:24) அவர் காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தது போன்று (கலா.4:5) அவருடைய மணவாட்டியும் காலம் நிறைவேறினபோது ஸ்திரீயிடனித்தில் பிறந்தாள். இப்பொழுது மணவாளனும், மணவாட்டியும் பூமியில். அவ்வண்ணமாகவே ஜாண் பாலும், அவனது மனவாட்டி கிறிஸ்லியும் பூமியில். ஏன் இவர்கள் பூமிக்கு மாம்ச சரீரத்தில் வரவேண்டும்? சோதிக்கப்பட்டு பாடுபடுகிறதற்காக. ( எபி 2:18). நாம் உபத்திரங்களினாலே பூரணப்படுத்தப்பட வேண்டும். (எபி. 2:10).

45. இப்பொழுது கிறிஸ்துவின் மணவாட்டி, கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறாள். ஆதலால் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று அதாவது கிறிஸ்துவோடு கூட மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுகிறாள். (1கொரி 15:3,4; ரோ 6:3-5). அதாவது கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவை தரித்துக் கொள்கிறாள். ( கலா 3:27.)நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது ( அப் 2:38) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கர்த்தராகிய இயேசு கிறி ஸ்து நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவான் (அப் 10:43) என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது.

46. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது மாத்திரமே பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு தகுதியைப் பெறுகின்றனர். பின் தேவன் தன்னுடைய ஆவியினால் அதாவது பரிசுத்த ஆவியினால் தாம் தெரிந்துக்கொண்ட

தம்முடைய மணவாட்டியை முத்தரிக்கிறார். அதாவது தேவன் தம்முடைய மணவாட்டியை நிச்சயித்துக் கொள்கிறார். பின் அவர் அதில் நின்று விலகுவதில்லை. (எபே 4:30)

47. இன்னும் சற்று விளக்கமாக கூறப்போனால் ; கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை மாம்சத்தில் வெளிப்படுத்தவே காலம் நிறைவேறினபோது மாம்சத்தில் பிறந்தார். பின் கல்வாரியில் அவளை வெளிப்படுத்தினார். (யோ.19:33, 34) அவள் யார்? கிறிஸ்துவை தரித்தவள் (கலா 3:27), கிறிஸ்துவை தரித்தவர்கள் யார்? கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் (ரோ 6:3) அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். அப்படியானால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம்பெற்றவர்கள் கிறிஸ்துவைத் தரித்தவர்கள் அல்லர். ஏனென்றால் அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்பைப் பெறவில்லை. தேவன் அப் 2:38ன்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களையே தமது சரீரத்தின் பாகமாக தெரிந்துகொண்டு (அப்2;47) அதை உறுதிப்படுத்த, அவர்களை பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கிறார்.

48. அவ்வண்ணமாகவே ஜாண் பாலும் தன் சரீரத்தின் பாகமாகிய தன் மனைவியைத் தெரிந்துக் கொண்டு, அவளை நிச்சயதார்த்ததின்போது, நிச்சயதார்த்த மோதிரத்தை (Engagement Ring) அணிவித்து அவளை (கிறிஸ்லியை) தன் மனைவியாக உறுதி செய்து கொள்கிறான்.இனி அவன் அதிலிருந்து மாறுவது இல்லை. நிச்சயதார்த்தம் தேவசமூகத்தில் திருமணத்திற்கு ஒப்பானது (Betrothal is equally as binding as the marriage) இது ஒரு கன்னியை ஒருவனுக்கு நியமிக்கப்படுவது ஆகும். உபா. 22:23. இது மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டது போன்று (மத். 1:18.) இனி இவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாது. ஆனாலும் திருமணம் வரை இவர்கள் சரீரத்தில் ஒன்று சேர முடியாது. திருமணம் வரை இவர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையும், உத்தமுமாக நடந்து கொள்ள வேண்டும். அதுபோலவே கிறிஸ்துவின் மணவாட்டியும் கிறிஸ்துவுக்கு உண்மையும் உத்தமுமாக அவர் அவளை மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளும்வரை நடந்துக் கொள்ளவேண்டும்.

49. சபை (பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அல்ல, மாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப் 2:47)கிறிஸ்துவுக்கு நியமிக்கப்பட்டுள்ளது. 2 கொரி11:2 கர்த்தராகிய இயேசு நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தான் கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்கள். Every bride must bear the name of her husband. அப்படியானால் பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் யாரை தரித்துக் கொண்டார்கள்? எனக்கு அருமையான பெண் வீட்டாரே (கிறிஸ்லியை தவிர) நீங்கள் யாரை தரித்துக் கொண்டீர்கள்? உங்கள் கிரியைகளை நீங்களை சீர்துக்கிப் பாருங்கள். கர்த்தர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுப்பாராக. வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி உங்கள் மனதை திறப்பாராக. வார்த்தையின் கருத்தை நீங்கள் அறிந்து கொள்ள முடியவில்லை. அது உங்களுக்கு தோன்றாமல் மறைபொருளாய் இருக்கிறது.

50. இந்த கருத்தில்தான் என் பிரசங்கம் அமைந்திருந்தது. ஆனால் இதன் மத்தியில் கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை புறம்பாக அலங்கரிக்கமாட்டாள். ஒரு பெண் தன்னை புறம்பாக அலங்கரிப்பது அஞ்ஞான மார்க்கம். சாத்தானுடையது, பிசாசினுடையது என கடிந்துக் கொண்டேன். 1 பேது 3:3-5 வசனங்களை வாசித்து ஈசாக்குக்கு பெண்ணைத் தேடிய எலியேசர் அவளிடம் குணத்தைத்தான் எதிர்பார்த்தான். புறம்பான அலங்கரிப்பை அவன் அவளிடத்தில் எதிர்பார்க்க வில்லை. கிறிஸ்தவ மார்க்கம் வெளிப்புற அழகு அல்ல. அது உட்புறத்தில் உள்ள அழகு.(கலா. 5:22,23) ஒரு பெண் தன்னை பொன் ஆபரணங்களினால் சிங்காரித்து கண்களில் மையிட்டு கொள்வது வீணாய் அவள் தன்னை அழகு படுத்துவதாகும். (எரே 4:30) தன் கண்களுக்கு மையிட்டு தன் தலையை சிங்காரித்தவள் யார்? யேசபேல் என்ற வேசி (2 சாமு 9:30, வெளி 2: 20) அலங்கரிப்பு என்பது என்ன? தேவன் உன்னை உருவாக்கிய விதத்தை தள்ளிவிட்டு உலகப்பிரகாரமான அழகு சாதனங்களை உபயோகித்து உன்னை அழகுபடுத்தி, மிகைப்படுத்தி தேவநீதிக்கு புறம்பாக செயல்படுபதாகும்.

51. அடுத்து அப்போஸ்தலனாகிய பேதுருவும் கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை புறம்பாக அலங்கரிக்ககூடாது. புறம்பான அலங்கரிப்பு உங்களுக்குள்ளே அலங்காரமாய் இராமல் அழியாத அலங்கரிப்பாய் இருக்கிற சாந்தமும், அமைதலும் உள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்கக் கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது என்கிறான். இவ்வாறாக நான் எடுத்துக் கூறும் வேளையில் எனது மூத்த சகோதரர் அதாவது பெண்ணின் அக்காளுடைய மாமனார் என் பிரசங்கத்தை தடை செய்து, தானும் ஒரு ஊழியக்காரன், பெண்கள் தங்களை புறம்பாக பொன் ஆபரணங்களினால் அலங்கரிக்கலாம் என வேதவாக்கியங்களைக் கொண்டு தன்னால் நிறுபிக்க முடியும் எனக் கூறி என் பிரசங்கத்தை இடை மறித்து தடுத்தார். என்னை அவமானப்படுத்தினார். என் பிரசங்கத்தை இடைமறித்து தடுத்தது தவறு, அது ஆவியானவரை நிந்திப்பது ஆகும் என நான் அவரை கடிந்து கொண்டேன். பொன் ஆபரணங்களினால் பெண்கள் தங்களை அலங்கரிக்கக் கூடாது என்று உபதேசிக்கும் நான் பெண் வீட்டாரிடமிருந்து தங்கத்தை சீதனமாக எப்படிப் பெறலாம் என்று கூறி அவர் ஆவேசப்பட, நான் பதிலுக்கு அதைக் குறித்து நாம் ஏற்கனவே பேசியுள்ளோம். அது நீங்கள் பெண்ணுக்கு கொடுக்கும் ஒரு ஆஸ்தி மற்றும் சொத்து எனவும் பேசி முடிவு எடுத்து விட்டோம். பின் அதை இங்கு மீண்டும் பேசுவதால் பலன் என்ன? அப்படியே மீண்டும் அதைக்குறித்து பேச வேண்டுமானால் இது அதற்குரிய தருணம் அல்ல என்று அவரை மீண்டும் கண்டித்தேன்.

52. என் பிரசங்கத்தை என் சகோதரன் தடை செய்ததை எனது அண்ணியாரும் கண்டித்தார்கள். எனது சகோதரனுடைய மகளும் தனது தந்தை நடந்து கொண்ட முறை தவறு. எங்களது சபையில் ஐயர் (இவர்கள் பூநூல் அணியும் ஐயரை / பிராமணரை குறிக்கவில்லை, மாறாக அவர்களது சபை பாதிரியாரை ஐயர் என குறிப்பிடுகிறார்கள்) பிரசங்கம் பண்ணும் போது அவருடைய பிரசங்கத்தை எனது அப்பா தடை செய்வாரா என்று கூறி தன் தகப்பனுடைய தவறை கடிந்து கொண்டார்கள். அடுத்து என்னை சிலர் வெளியே நின்றுக் கொண்டு பிரயோஜனம் இல்லாத வார்த்தைகளாலும், உபயோகமில்லாத வசனங்களினாலும் கிண்டலும், பரிகாசமும் செய்வதைக் கேட்டேன். அதுவும் என் சகோதரர் வீட்டாரே.

53. நானோ தேவவசனத்தை கலப்பாய் பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசினேன். அது நிச்சயமாக கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்குகேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்குக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருந்தது.

54. மேலும் என்னுடைய செய்தி புரியவில்லை என சில பெண்கள் கூறியதாகவும் என் வீட்டார் என்னிடம் தெரிவித்தனர். அந்த பெண்கள் என் வாயின் வார்த்தைகளின் கருத்தை அறிந்துக் கொள்ள முடியவில்லை. அது அவர்களுக்கு தோன்றாமல் மறைபொருளாய் இருந்தது. (அப் 9:45) வேத வாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை கர்த்தர் திறக்கவில்லை (லூக் 24:45) லீதியாளுடைய இருதயத்தை திறந்த தேவன் இவர்கள் இருதயத்தை திறக்க வில்லை என்றால் நான் என்ன செய்யமுடியும்? (அப் 16:14)

55. எனது செய்தி தடைபட்டது. சிறிது சலசலப்பு. எனது சகோதரர் எனக்கு சத்துருவாக நின்றார். ஆனாலும் நாங்கள் இவரை எங்கள் குடும்ப ஜெபங்களில் அனுதினமும் நினைத்து ஜெபித்து வருகிறோம். நான் நிச்சயதார்த்த மோதிரத்தை ஆசீர்வதித்துக் கொடுக்க மாப்பிள்ளையும், பெண்ணும் ஒருவருக்கொருவர் மாற்றிக் கொண்டார்கள். ஜாண் பால் , கிறிஸ்லி அவன் சரீரத்தின் பாகம் என்பதை உறுதி செய்து அதற்கான அடையாள மோதிரத்தை அவளுக்கு அணிவித்தான். அவ்வண்ணமாகவே கிறிஸ்லியும் ஜாண் பாலின் சரீரத்தின் ஒரு பாகம் தான் என்பதை உறுதிப்படுத்தி அதற்கான அடையாளமாக மோதிரத்தை அவனுக்கு அணிவித்தாள். உறவினர்கள் தங்களது கைகளை தட்டி தங்களது மனமகிழ்ச்சியை தெரிவித்தனர். காட்பாடி பாஸ்டர் ஜெபிக்க வைபவம் இனிது முடிந்தது. மதிய உணவும் முடிந்தது. பெண் வீட்டார் என்னை கூப்பிட்டு பெண்ணுக்குரிய சீதனத்தில் ஒரு பங்கை அவளிடம் கொடுக்க அவள் அதை தன் கணவனாகப்போகும் ஜாண் பாலிடம் கொடுக்க, அவன் அதை நான் குடும்ப தலைவன் என்கிற முறையில் என்னிடம் கொடுத்தான். அந்த பங்குக்காக எனது மைத்துனர் அசரியா சத்தியகுமார் அவர்கள் ஜெபித்து ஆசீர்வதித்துக் கொடுத்தார். திருமண நாள் 2008 July 26 என நிச்சயிக்கப்பட்டது. பின்பு உறவினர்கள் அவரவர் இடங்களுக்கு புறப்பட்டுச் சென்றனர். எங்களை வழிவிட்டு அனுப்ப ஒருநாதியும் கிடையாது. அந்த அளவுக்கு மரியாதை பெண்வீட்டில் எங்களுக்கு சீரும் சிறப்புமாக இருந்தது. ஆனால் அதில் எங்களுக்கு மனவருத்தம் எதுவும் இல்லை. ஏனென்றால் நாங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் மனரம்மியமாக இருக்க கர்த்தரிடத்தில் கற்றுக் கொண்டோம். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

56. ஆனாலும் இந்த சம்பவம் என் குடும்பத்தில் ஒரு பிரச்சனையாக இருந்து அநேகருக்கு உள்ளத்தில் மன மடிவை உண்டாக்கியது. இதோ, நான் காதால் கேட்டதும், வாயால் சொன்னதும்.

1. சிலர் நான் CSI குடும்பத்தில் பெண் எடுத்திருக்க கூடாது என்றனர். ஆனால் தேவன் நியமித்தப் பெண் அங்குதான் இருந்தாள். பெண் வீட்டார் வெளிச்சத்திற்கு விரோதமாய் நடக்கிறவர்கள் என நான் நினைக்கவில்லை. ஆனாலும் அகித்தோப்பேலின் ஆலோசனையை கர்த்தர் பைத்தியமாக்கும்போது அனைத்தும் சரியாகிவிடும்.
2. நான் சிலர் நிச்சயதார்த்தத்தை நடத்தியிருக்கக் கூடாது, அதை நிறுத்தியிருக்கவேண்டும் என்றனர். தேவன் நியமித்த பெண்ணை நான் தடுத்து நிறுத்த யார்? என்னால் கூடாதே
3. சிலர் நகை அணிந்து ஒரு பெண் புறம்பாக அலங்கரிக்கக்கூடாது என்று நீங்கள் உபதேசிக்கும் போது தங்கத்தை சீதனமாக எப்படி வாங்கலாம் என்றனர். பணமும், பொன்னும், வீடும், நிலங்களும் ஆஸ்திகளே. அதலால் இவைகளை சீதனமாக வாங்குவது தவறு இல்லை.
4. சிலர் நீங்கள் பெண்ணுக்கு விலை உயர்ந்த புடவை நிச்சயதார்த்தத்துக்கு எடுத்துக் கொடுத்தது உங்கள் தகுதிக்கு மிஞ்சியது. ஒரு ஊழியக்காரன் அப்படி செலவு செய்யக்கூடாது என்றனர். அது என் மகனுடைய பத்துநாள் சம்பளத்தில் அடங்கியிருக்கும்போது அது அவனுக்கு ஆடம்பரமா? நீங்கள் அவனிடம் கேளுங்கள்.
5. சிலர் திருமணத்தை உங்கள் இடத்திலே நடத்த வேண்டும். பெண் வீட்டில் நடத்தக் கூடாது. அப்பொழுது தான் நாங்கள் திருமணத்தில் வந்த கலந்து கொள்வோம் என்றனர். திருமணத்தை பெண் வீட்டில் வைப்பது என் தவறுதான். ஆனாலும் என் இருதயத்தை தேவன் அறிவார்.
6. சிலர் நீ பொருளாசைக்காரன் என்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டோம் என்றனர். அவர்கள் அதை விளக்கிக் காட்டினால் நலமாக இருக்கும். என் தவறை வேதவாக்கியங்களின் அடிப்படையில் எடுத்துக் கூறினால் நான் என் தவறை திருத்திக் கொள்கிறேன்.
7. சிலர் இது என்ன நிச்சயதார்த்த சாப்பாடா ? நிச்சயதார்த்த சாப்பாடு திருமண விருந்தைவிட பிரமாதமாக இருக்க வேண்டுமே என்றனர். பெண் வீட்டார் உங்களை மட்டம் தட்டி வருகிறார்கள் நீங்கள் அதை கண்டுகொள்வது இல்லை என்றனர். எனக்கும் சாப்பாடு பிடிக்கவில்லை. ஆனாலும் பெண் வீட்டார் உபசரிப்பை நான் குறை கூறக் கூடாது. எனக்கு என்னமோ கத்தரிக்காய் பச்சடி மட்டும் தான் நன்றாக இருந்தது.
8. சிலர் பெண் கருப்பு, அதை எப்படி உங்கள் பையனுக்கு தெரிந்து கொண்டீர்கள், கொஞ்சம் நிறமாக பெண் இருந்தால் நலமாக இருக்குமே என்றனர். அவள் கருப்போ, சிகப்போஅவளை தான் தேவன் தெரிந்தெடுத்தார். நாங்கள் அவள் நிறத்தை பார்க்கவில்லை, படிப்பை பார்க்கவில்லை, ஆனால் அவள் எவ்வளவாய் இருக்கிறாள் என்பதைதான் பார்த்தோம். அதில் மனநிறைவு அடைந்தோம்.
9. சிலர் உங்கள் சகோதரர் பெண் வீட்டார் மீதும், உங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். ஆதலால் தான் அனைத்து காரியங்களிலும் இவர் முக்கை நுழைக்கிறார் என்றனர். ஆனால் சில்ரோ நான் பெண் வீட்டார் மீது ஆதிக்கம் செலுத்துகிறேன் என்கிறார்களே?
10. சிலர் ரூ.3,000/- , ரூ.4,000/- சம்பளம் வாங்கியவனுக்கு கொடுத்த சீதனமா உங்கள் மகனுக்கும் ? உங்கள் மகன் அவனைவிட பல மடங்கு சம்பளம் வாங்குகிறவன் அல்லவா? உங்களை பெண் வீட்டார் நன்றாக ஏமாற்றி விட்டார்கள். உங்கள் சகோதரர் மகனுக்கு கொடுத்த சீதனத்தை விட பல மடங்கு அதிகம் கேட்டு வாங்கி யிருக்க வேண்டுமே எனக்கூறி, நான் பிழைக்கத் தெரியாதவன் என்றனர். சிலர் சீதனத்தில் உங்கள் அண்ணன் தலையீடு அதிகம். அவர் தன் பையனுக்கு கொடுத்ததற்கு மிஞ்சி 5 பைசா கூட உங்கள் பையனுக்கு கொடுக்க அனுமதிக்க மாட்டார். ஆதலால் அவரை நம்பாதீர்கள். அவர் உங்களை மோசம் போக்குகிறவர் என்றனர். பெண்ணுக்கு சீதனம் கொடுப்பது பெண்வீட்டார் விருப்பம். நான் அதில் தலையிட முடியாது. அவர்கள் சுதந்திரத்தில் நான் தலையிடவும் விரும்ப வில்லை. கர்த்தருடைய சித்தம் எதுவோ அது நடக்கும். அதை யாரும் தடை பண்ண முடியாது.
11. சிலர் நீங்கள் நாகர்கோவிலில் எத்தனையோ பெந்தெகொஸ்தே குடும்பத்தினர், இதைவிட பல மடங்கு சீதனம் கொடுக்கும் வசதி உடையவர்கள் உண்டு. அங்கு பெண் எடுத்திருக்கலாமே! நல்ல உத்தியோகத்தில் உள்ள உங்கள் பையனுக்கு சரியான முறையில், தகுந்த முறையில் சீதனம் கொடுக்காத வீட்டில் பெண் எடுத்து விட்டீர்களே என என்னை கடிந்து கொண்டவர்களும் உண்டு. நாங்கள் பெண்ணின் குடும்பத்தையும், ஆவிக்குரிய காரியங்களில் பெண் வாஞ்சையையும் பார்த்தோம். பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.
12. சிலர் நடக்கவேண்டியது நடந்து முடிந்து விட்டது. இனி திருமணத்திலாவது எச்சரிக்கையாக இருந்து காரியங்களை பெந்தெகொஸ்தே முறைபடி, அனுபவத்தின்படி நடப்பிக்க தவறாதீர்கள் என்று ஆலோசனை கூறினர். உங்கள் ஆலோசனைக்கு மிக்க நன்றி. நிச்சயமாக திருமணம் பெந்தெகொஸ்தே முறைபடியே நடக்கும்.

13. சிலர் என்று பெண்வீட்டார் திருத்துவ ஞானஸ்நானம் எடுத்தார்களோ அப்பொழுதே நீங்கள் ஒதுங்கியிருக்க வேண்டும். இந்த குடும்பத்தோடு சம்பந்தம் கலந்திருக்கக் கூடாது என்றனர். நாங்கள் பெண்ணுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தோம். அவள் அங்குள்ள கழுகுக் குஞ்சு என நாங்கள் நம்புகிறோம்.
14. சிலர் நிச்சயதார்த்தத்தில் மாப்பிள்ளையும் பெண்ணும் நிச்சயதார்த்த மோதிரம் மாற்றிக் கொண்டதினால் இனி திருமணத்தில் தாலி அணியவேண்டிய தேவையில்லை என்றனர். சிலர் திருமணத்தில் பெண் நிச்சயதார்த்த மோதிரத்தை கழட்டிவிட்டு தாலியை மட்டும் அணிந்து கொள்ளட்டும் அது போதும். நிச்சயதார்த்த மோதிரமும் தாலியும் ஒரே நேரத்தில் தேவையில்லை என்றனர். மோதிரம் நிச்சயதார்த்தத்தின் உறுதிக்காக, தாலி திருமண உடன்படிக்கைக்கு அடையாளமாக. இதில் தவறு கிடையாது என நினைக்கிறேன்.
15. சிலர் சொந்தத்தில் பெண் கொள்வதும், கொடுப்பதும் தவறு. அப்படி எடுப்பதினால்தான் குடும்பத்திற்குள் இப்படி பிரச்சனைகள் வருகிறது. இதனால் வரும் பாடுகளையும் அனுபவிக்கவேண்டியிருக்கிறது என்றனர். எங்களது திருமண காரியத்தில் மாப்பிள்ளை பெண் வீட்டார் மத்தியில் பிரச்சனைகள் எதுவும் இல்லை. உறவினர்கள் தான் பிரச்சனைகளை கிளப்பி வருகிறார்கள்.
16. சிலர் உங்களின் அண்ணன் தனது இரண்டாவது மகனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து நிச்சயதார்த்தம் செய்துவிட்டு, பின் தான் எதிர்பார்த்த பணம் கிடைக்கவில்லை என்பதால் அதை நிறுத்திவிட்டு பின் இன்னும் வசதியான குடும்பத்தை பார்த்தவர் தானே. நீங்களும் ஏன் அப்படி செய்யகூடாது என அபிப்பிராயம் தெரிவித்தனர். அவருடைய காரியத்தை நான் கடைப்பிடிக்க கூடாது. அவருக்கும் எனக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அவர் இப்பிரபஞ்சத்திற்குரியவர். நானோ கர்த்தருடைய சபை பக்தி விருத்திக்கு ஐந்து வகை ஊழியங்களில் ஒரு ஊழியத்தைக் கொண்டவன்.
17. சிலர் இதர குடும்ப திருமணத்தை நீங்கள் நடத்தி வைத்திருக்கலாம். ஆனால் உங்கள் குடும்ப திருமணத்தை நீங்கள் நடத்தி வைக்கக் கூடாது. மற்ற ஊழியர்களைக் கொண்டு நடத்தி வைக்க வேண்டும், நீங்கள் நடத்துவதால் தான் விபரீதம் நடக்கிறது என என்னை கடிந்து கொண்டனர். சாத்தானை எதிர்த்து விட்டேன். அவன் நிச்சயமாக ஓடிப்போவான். ஆதலால் இனி விபரீதம் ஒன்றும் நடக்காது. திருமண ஆராதனை நடத்துவது நானாகத்தான் இருக்கும். திருமணப் பதிவாளர் மற்றும் லோக்கல் பாஸ்டர் இதில் பங்கு கொள்வார்கள் என நினைக்கிறேன்.
18. திருமணத்தில் பூமாலைகள் மணமகன் மற்றும் மணமகள் கழுத்துகளில் போட நீங்கள் அனுமதிப்பீர்களா என்றனர். நான் நிச்சயமாக அனுமதிக்கமாட்டேன் என்றேன்.
19. சிலர் மேளவாத்தியங்களை அனுமதிப்பீர்களா என்றனர். நான் அது பெண்வீட்டார் விருப்பம் என கூறிவிட்டேன். இதில் தவறு எதுவும் இல்லை என்பது எனது கருத்து.
20. முடிவாக சிலர் நீங்கள் பெண்ணுக்கு வலுக்கட்டாயமாக ஞானஸ்நானம் கொடுத்தீர்கள் என்றனர். நானோ என் இருதயத்தையும், பெண்வீட்டாருடைய இருதயத்தையும் தேவன் அறிவார் என கூறினேன்.

57. இப்படியாக குடும்பத்தினரும் உறவினரும், நண்பர்களும் ஆளுக்கொன்றை பேசி மணமகன், மற்றும் மணமகள் வீட்டார் நிம்மதியைக் கெடுத்தனர். இதில் என் முடிவு என்ன? பெண் கொடுப்பவர்கள், பெண் எடுப்பவர்கள் இருவரும் தங்களுக்குள் எந்தவிதமான மனஸ்தாபம் இருக்குமானால் அதை அவர்கள் இருவருமாக பேசி அந்த பிரச்சனையை தீர்த்துக் கொள்ளட்டும். இதை விட்டுவிட்டு உறவினர்களும் நண்பர்களும் முட்டி மோதி, மூக்கை நுழைத்துக் கொண்டு தலையிடாமல் இருந்து கொண்டால் அதுவே தேவனுடைய பார்வையில் பிரிதீயாக இருக்கும். எங்கள் இருவருக்குள்ளும் மனஸ்தாபம் எதுவும் இருந்ததாக தெரியவில்லை ஆனால் உறவினர்கள்தான் பிரச்சனைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

58. இப்பொழுது என் சகோதரர் நான் என் பிரசங்கத்தில் ஆபரணங்கள் அணியும் பெண்கள் மீது சாபத்தை கூறியதாகவும், மேலும் அவர்களை சாத்தானுடைய பிள்ளைகள் என்று வருணித்ததாகவும் கூறி, ஆதலால் தான் அவர்கள் என்மீது கோபம் கொண்டு என் பிரசங்கத்தை தடை செய்ததாகவும் கூறியதாக அறியவந்தேன். இது முற்றிலும் தவறு. இது குறித்து நான் என் வீட்டாரிடம் விளக்கம் கேட்டேன். அவர்கள் அவ்வாறு நீங்கள் பிரசிங்கிக்க வில்லை என்றனர். மேலு ம் சபை விசுவாசிகள் இருவரிடம் விவரம் கேட்டேன். உங்கள் சகோதரர் கூறுவது தவறு என்றனர். என் மகனும் நீங்கள் அவ்வாறு பேசவில்லை என கூறினான். நான் என் மருமகளையும் கேட்டேன். அவள் தான் இருந்த சூழ்நிலையில் நான் என்ன பேசினேன் என்பதை சரியாக அறியவில்லை என கூறினாள். நான் பேசியது என்ன? பெண்கள் ஆபரணங்கள் அணிந்து தங்களை புறம்பாக அலங்கரிப்பது ஒரு அஞ்ஞானமார்க்கம், அது சாத்தானுடையது, அது பிசாசினுடையது. இதற்கு மிஞ்சி நான் எதுவும் கூறியதாக கூறுவது தவறு மற்றும் சத்தியமின்மை. நான் என் சகோதரர் கூறியபடி சொல்லியிருந்தால் அதற்காக மனஸ்தாபப்படுகிறேன்.நான் அப்படி சொல்லியிருக்கக்கூடாது.

59. காரியத்தின் கடைதொகையை கேட்பீர்களாக. இந்த திருமண காரியத்தில் இதுவரை நடந்த அனைத்து பிரச்சனைகளுக்கும் , விபரீதங்களுக்கும் என் மூத்த சகோதரர் மற்றும் மருமகள் எமிலி பாலசிங் தான் காரணம் என்பது என் தாழ்மையான கருத்து.

60. நிச்சயதார்த்தம் முடிவு பெற்றது. மறுநாள் எனது மருமகள், எனது மகனுக்கு ஒரு SMS அனுப்பினாள். அதன் விவரமானது I know that I was the reason for the problem on that day. I can only promise you one thing, I will do my best to make sure things go well during the wedding. I cried so much that night. I hope you have forgiven me. I am really sorry. ஆங்கிலத்தில் உள்ள இந்த பகுதியை என் குறுகிய ஆங்கில அறிவுடன் கீழ்க்கண்டவாறு மொழிப்பெயர்க்கிறேன். நிச்சயதார்த்த நாள் அன்று நடந்த சம்பவத்திற்கு நான்தான் காரணம் என்று அறிவேன். திருமண நாளில் அனைத்து காரியங்களும் சுமுகமாக நடைபெறும் என நான் வாக்குக் கொடுக்கிறேன். அந்த நாள் இரவு நான் மிகவும் அழுதேன். என்னை நீங்கள் நிச்சயமாக மன்னிப்பீர்கள் என நம்புகிறேன். இந்த SMS செய்தியை என் மகன் என்னிடம் கூறியபோது நாங்கள் மிக்க மகிழ்ந்தோம். நாங்கள் எங்கள் மருமகளை மிகவும் விரும்புகிறோம், அவளை மிகவும் நேசிக்கிறோம். முற்றிலுமாக எங்கள் இருதயம் அவளை நம்பும். அவள் கருப்போ, சிகப்போ அது ஒரு பொருட்டல்ல. அவள் கன்னிமானவள். தாழ்மை குணமுள்ளவள். நிச்சயமாக அவளிடம் ரெபெக்காளின் குணம் உண்டு. நிச்சயமாக என் மகன் அவளை அநேகம் பெண்கள் குணசாலிகளாய் இருந்ததுண்டு: நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள் என்று புகழ்வான். அவளுடைய SMS செய்தி அனைத்து வாதங்களுக்கும், பிரச்சனைகளுக்கும், விபரீதங்களுக்கும் முற்றுப்புள்ளியை வைக்கிறது. எங்கள் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது.

ஏப்ரல் / மே, 2008

சகோ. காலேப் யோசுவா.

# உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்

1. கர்த்தர் என்னுடைய பெலன். அவர் தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர். என் இருதயம் அவரை நம்பியிருக்கிறது. நான் சகாயம் பெற்றேன். ஆகையால் என் இருதயம் களிகூருகிறது.

2. பொல்லாங்கன் தொடுத்த பொய் வழக்கின் காரணமாக நான் கோவை, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 7க்கு வழக்கு எண் 94/2006 நிமித்தமாக 19.05.2006ல் ஆஜராக சம்மன் பெற்றேன். அன்று ஆஜராகி என் மீது குற்றம் சாட்டுகிறவன் கொடுத்த குற்றப்பத்திரிக்கையின் நகலை பெற்று வந்தேன். மீண்டும் 08.02.2006ல் நீதி மன்றத்தில் ஆஜராகி வந்தேன். கர்த்தர் அனுமதித்ததினால் 11.06.2006 அன்று இரவு எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். ஆதலால் 15.06.2006 முதல் 2008 ஏப்ரல் மாதம் வரை நான் நீதிமன்றம் செல்ல தடைப்பட்டேன். இதனால் என் மீது பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்பும் நான் நீதிமன்றம் செல்லமுடியாத நிலையில் இருந்ததால், என்மீது ஜாமினில் வெளிவரமுடியாத பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

3. நான் வீடு அடிக்கடி மாற்றிவந்ததால், என்னை கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது. ஆதலால் என்னை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த முடியாமல் போய்விட்டது என எழுதுகிறான் பொய்யன், கபடமுள்ள கள்ள எழுத்தாணி. சுற்றறிக்கை என வெளியிடுகிறான், அதில் அவனுக்கு கொடுக்க விலாசம் இல்லை. காயீனைப் போன்று தேவனுடைய சமூகத்திற்கு விலகி, மறைந்து இந்த பூமியில் நிலையற்று அலைந்து கொண்டு கெர்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாம் என்று வகைத்தேடி சுற்றித்திரியும் பிசாசு என்னை கண்டுபிடிக்க முடியவில்லை, என்பது எவ்வளவு கொடிதான பொய் என்பதை உங்களால் அறியமுடிகிறதா? இப்பொழுது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் அன்புடன் அழைக்கிறோம் என்ற மாய்மாலத்திற்கு மாய்மாலக்காரன் வந்துவிட்டதை கவனித்தீர்களா?

4. 21.04.2008 அன்று நீதிமன்றத்தில் என் வழக்கறிஞருடன் ஆஜரானேன். நீதிபதி கண்களில் தயவு கிடைத்தது. எனக்கு ரூ.1,000/- அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் இரண்டு பேர் ஜாமின் கொடுக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி 28.04.2008 நீதிமன்றத்தில் ஆஜராகி ரூ.1,000/- ஆபராதம் கட்டினேன். இரு ஜாமின்தாராக நமது சகோதரர்கள் முன்வந்து ஆஜரானார்கள். மீண்டும் நீதிபதியின் கண்களில் சகாயம் கிடைத்தது. ஜாமினில் வெளிவரமுடியாத பிடிவாரண்ட் ரத்து செய்யப்பட்டது. கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

5. எனக்காக கேரளா, பாலக்காடு சகோதரர் மற்றும் கோவை சகோதரர்கள் எடுத்த பிரயாசங்கள் மிகுதி, மிகுதி. நான் தங்கிய இடத்திலிருந்து என்னை நீதிமன்றம் வரை தங்கள் வாகனங்களில் கூட்டிச் சென்று, அங்கு எனக்காக காத்திருந்து, அந்தந்த வேளைகளில் என்னை போஷித்தனர். எனக்காக அபராதத்தை நீதிமன்றத்தில் கட்டினர். வழக்கறிஞரின் கட்டணத்தைக் கொடுத்தனர். இப்படியாக எனக்கு எந்த விதமான உடன் செலவுகள் எதுவும் இல்லாமல் அவர்களே அனைத்தையும் பார்த்துக் கொண்டனர். உண்மையான சகோதர சிநேகத்தை, சகோதர அன்பை இந்நாட்களில் கண்டேன், ருசிபார்த்தேன். நிச்சயமாக சகோதர சிநேகம் கிறிஸ்துவின் மணவாட்டி மத்தியில் நிலைத்திருக்கிறதைக் கண்டேன்.

6. அடுத்து வழக்கின் வாய்தா 30.05.2008 அன்று போடப்பட்டுள்ளது. இனி அடுத்து நடக்கவேண்டிய காரியங்களை கர்த்தர் பார்த்துக் கொள்வார். ஏனென்றால் அவர் மீது என் பாரத்தை எல்லாம் வைத்துவிட்டேன். எனக்கு ஒரு ஊழியக்கார சகோதரர் வழக்கறிஞராக கிடைத்திருக்கிறார். இது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் அவருக்கு தேவையான ஆலோசனைகளை ஏற்ற வேளையில் கொடுத்து வழி நடத்துவார். நிச்சயமாக குற்றசாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டு போவான். கர்த்தர் அவன் தலையை நசுக்கிவிட்டார். என் ஜெயம் கர்த்தரால் வரும். ஏனென்றால் நான் என் தேவனை நம்பியிருக்கிறேன். ஆதலால் நான் வெட்கப்பட்டு போகாதபடி செய்வார். முகாந்தரம் இல்லாமல் துரோகம் பண்ணி பொய் குற்றச்சாட்டுகளை பிணைக்கிறவன் வெட்கப்பட்டு போவான். அது நிச்சயம், நிச்சயம். ஆமென்.

ஏப்ரல் / மே, 2008

சகோ. காலேப் யோசுவா.